Find us on facebook/tamilmirror
Follow us on tamilmirror
epaper/tamilmirror.lk

# தமிழ்Mirror

www.tamilmirror.lk

FRIDAY, AUGUST 18, 2023

வெள்ளிக்கிழமை ஓகஸ்ட் 18, 2023 | ஒளி: 09 கதிர்: 065 | பக்கம்: 06 | வடக்கு,கிழக்கு | FREE

## 2 தலையணைகள், மெத்தை கதை பொய்

பாராளுமன்றத்தின் குழு அறையில் இரண்டு தலையணைகள் மற்றும் மெத்தை ஒன்று காணப்பட்டதாகவும் அவை எதற்காக இந்த அறைக்கு கொண்டு வரப்பட்டன என்பது குறித்து கண்டறியப்படும் என்றும் பாராளுமன்ற அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

பாராளுமன்ற வளாகத்தின் குழு அறைகளை ஆய்வு செய்த போது, இந்த இரண்டு தலையணைகள் மற்றும் மெத்தை கண்டுபிடிக்கப்பட்டன.

தொடர்ச்சி P2

ஹிந்தி, சீன மொழிகள் விவகாரம்:

## இந்தியாவுக்கும் சீனாவுக்கும் விற்கப் பார்க்கிறார்களா?

### மரிக்கார் எம்.பி கேள்வி



இலங்கை குழந்தைகள் எதிர்காலத்தில் ஹிந்தி மற்றும் சீன மொழிகளைக் கற்க வேண்டும் என்ற ஜனாதிபதி கூறிய கதையை பத்திரிகைகளில் பார்க்கும்போது, இந்தியாவுக்கும் சீனாவுக்கும் நாட்டை விற்கப் பார்க்கிறார்களா என்று கேட்கத் தோன்றுகிறது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் ஊடகப் பேச்சாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான எஸ்.எம். மரிக்கார் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

நிதி கடன் தொடர்பான சவால்களை எதிர்கொள்ள

# சீனா உதவும்



நிதிக் கடன் தொடர்பான சவால்களை திறம்பட எதிர்கொள்ள, இலங்கைக்கு சீனா உதவும் என்று சீன வெளிவிவகார அமைச்சர் வாங் யி உறுதிப்படுத்தினார்.

தென்மேற்கு சீனாவின் யுனான் மாகாணத்தின் குன்மிங்கில் நடைபெறும் ஏழாவது சீன-தெற்காசிய கண்காட்சியையொட்டி, இலங்கை பிரதமர் தினேஷ் குணவர்தன சீனாவுக்கு விஜயம் செய்துள்ள நிலையில், இடம்பெற்ற சந்திப்பின் போதே இந்தக் கருத்து வெளியிடப்பட்டுள்ளது.

சீனா எப்போதும் இலங்கையின் நம்பகமான மூலோபாய பங்காளியாக இருப்பதாகவும் இலங்கை எப்போதும் சீனாவுடன் நட்புறவுடன் இருப்பதாகவும், அதன் முக்கிய நலன்கள் தொடர்பான பிரச்சினைகளில் சீனாவுக்கு ஆதரவாக நிற்கிறது என்பவற்றைப் பாராட்டுவதாக அவர் குறிப்பிட்டார்.

தொடர்ச்சி P2

## ஜூலையில் தேயிலை உற்பத்தி அதிகரிப்பு



2023ஆம் ஆண்டின் ஜூலை மாதத்துக்கான இலங்கையின் தேயிலை உற்பத்தி மொத்தமாக 21.37 மில்லியன் கிலோ கிராமாக பதிவாகியுள்ளதாகவும் கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் 1.45 மில்லியன் கிலோ கிராம் அதிகரிப்பை காட்டுவதாகவும், ஃபோர்ப்ஸ் மற்றும் வோக்கர்ஸ் தேயிலை முகவர்கள் தெரிவிக்கின்றனர்.

2022 ஜூலையில் தேயிலை உற்பத்தி 19.92 மில்லியன் கிலோ கிராமாக காணப்பட்ட தேயிலை உற்பத்தி, 2023 ஜூலையில் 21.37 மில்லியன் கிலோ கிராமாக அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2



## மேர்வினுக்கு எதிராக முறைப்பாடு

பு. கஜிந்தன்

முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வா, விகாரைகள் மீதும் பிக்குகள் மீதும் கை வைத்தால், கை வைப்பவர்களது தலையை எடுத்து களனிக்கு கொண்டு வருவதாக, களனியில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் தெரிவித்தை அடுத்து, அந்தக் கருத்துக்கு பலரும் தமது எதிர்ப்பை வெளிப்படுத்தி வருகின்றனர்.

தொடர்ச்சி P2

## ‘காணிகளை பறிப்போர் கச்சையையும் உருவுவர்’

### 13 வேண்டாம் என ஆர்ப்பாட்டம்

எஸ்.எம்.எம் முர்ஷித்

முஸ்லிம்களின் காணிகளை பராமரிப்பதற்கு தடையாக இருப்பவர்கள், முஸ்லிம்களின் கச்சைத் துணிகளைகூட உருவிவிட்டு அனுப்பக்கூடிய வாய்ப்புகள் அதிகம் இருப்பதால் 13ஆவது திருத்தச் சட்டத்தை அமல்படுத்த வேண்டாம் என்று மட்டக்களப்பு மாவட்டத்தின் ஓட்டமாவடி, நாவலடி பிரதேசத்தில் புதன்கிழமை (16) ஆர்ப்பாட்டம் இடம் பெற்றது.

தொடர்ச்சி P2



## குருந்தூர்மலையில் சிவாலயம் நிறுவுவதற்கு தீர்மானம்



பு. கஜிந்தன்

குருந்தூர்மலையில் சிவாலயமொன்றை நிறுவ தீர்மானிக்கப்பட்டுள்ளதாக பௌத்த-இந்து அமைப்புகள் சில கூட்டாக அறிவித்தன.

குருந்தூர்மலை விவகாரம் தொடர்பில் யாழ்ப்பாணம் ஆரியகுளம் நாக விகாரையில் தென்னிலங்கை பௌத்த பிக்குகளும் சிவசேனை உள்ளிட்ட சில சைவ அமைப்புகளின் பிரதிநிதிகளுக்கும் குருமார்களுக்கும் இடையில் வியாழக்கிழமை (17) கலந்துரையாடலில் ஈடுபட்டனர். இதன் பின்னர் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் பௌத்த, இந்து அமைப்புகள் இதனை அறிவித்தன.

தொடர்ச்சி P2

## குருந்தூர்மலைக்கு அணி திரளுங்கள்

### தமிழர்கள் அனைவருக்கும் அமலன் அழைப்பு

சண்முகம் தவசீலன்



பொங்கல் நிகழ்வை சிறப்பிக்கவும், தமிழ் மக்களின் இருப்பினை நிலைநாட்டவும் குருந்தூர்மலைக்கு இன்று (18) அணிதிரண்டு வருமாறு முன்னாள் கரைதுறைப்பற்று பிரதேச சபை உறுப்பினர் த.அமலன் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

டயரபா நீர்த் தேக்கத்தால்

## 120 மெகாவோட் மின்சாரம்; 15 ஆயிரம் ஏக்கரில் விளைச்சல்

### கிடைக்கும் என்கிறார் சஷேந்திர



டயபரா நீர்த் தேக்கத்தின் மூலம் தேசிய மின் உற்பத்தி கட்டமைப்புக்கு 120 மெகாவோட் மின்சாரம் கிடைக்கும் என்பதோடு, பெரும்போகத்தின் போது 15 ஆயிரம் ஏக்கர் நிலத்தில் நெல் விளைச்சலை மேற்கொள்ள முடியும் என்று நீர்ப்பாசன இராஜாங்க அமைச்சர் சஷேந்திர ராஜபக்ஷ தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## மிகக் குறைந்த வருமானம் கொண்ட நாடு இலங்கை

தெற்காசிய பிராந்தியத்தின் மொத்த உள்நாட்டு உற்பத்தியுடன் ஒப்பிடும் போது, மிகக் குறைந்த வருமானத்தைக் கொண்ட நாடாக இலங்கை காணப்படுவதாகவும் கடந்த 17 வருடங்களில் இலங்கை தனது வருமான இலக்குகளை அடையத் தவறியுள்ளதாகவும் ‘வெரிடே ரிசர்ச்’ என்ற நிறுவனம் முன்னெடுத்துள்ள ஆய்வில் தெரியவந்துள்ளது.

தொடர்ச்சி P2

ஆக்கபூர்வ நடவடிக்கை இன்றி

## எந்த முயற்சியும் வெற்றியளிக்காது

### தேசிய நல்லிணக்கத்தை வலுப்படுத்த உதவாது என்கிறார் டக்ளஸ்



வடக்கு, கிழக்கு பிரதேசங்களில் தொல்லியல் திணைக்களம் மற்றும் வனவளப் பாதுகாப்பு, வனஜீவராசிகள் திணைக்களம் ஆகிவற்றின் செயற்பாடுகள், தற்போதைய ஜனாதிபதி மற்றும் அரசாங்கத்தின் கொள்கை ரீதியான தீர்மானங்களுக்கு மாறாக இருப்பதால், இவ்வாறான விடயங்கள் தொடர்பாக ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்ளாமல், முன்னெடுக்கப்படுக்கின்ற எவ்வகையான முயற்சிகளும் வெற்றியளிக்காது எனவும் தேசிய நல்லிணக்கத்தை வலுப்படுத்த உதவாது என்றும் ஈ.பி.டி.பி கட்சியின் செயலாளர் நாயகம் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

தொடர்ச்சி P2



## “கல்வி முறையை மாற்றாவிடின் நமக்கு எதிர்காலம் இல்லை”

தற்போதைய கல்வி முறையை மாற்றாவிட்டால், நமக்கு எதிர்காலம் இல்லை. புதிய கல்வி முறையின் மூலமே, நாம் முன்னேற முடியும் என்று தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, உலகளாவிய எதிர்கால சவால்களுக்கு முகங்கொடுக்கக்கூடிய மற்றும் நவீன தொழில்நுட்பத்துக்கு ஏற்ற கல்வி முறை நாட்டுக்கு அறிமுகப்படுத்தப்படும் என்றும் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## “சீனி வாங்குவதற்காக உயிர் தியாகம் செய்யவில்லை;

### விலைபோக முடியாது” என்கிறார் விந்தன்

பு. கஜிந்தன்



தமிழ் மக்கள் முப்பது வருடங்களுக்கு மேலாக, அரசியல் அபிலாஷைகளை வென்றெடுப்பதற்காக பல்வேறு போராட்டங்களை நடத்தி வருகின்ற நிலையில், அரசாங்கத்திடம் சீனி வாங்குவதற்காக எமது மக்கள் உயிர்த் தியாகம் செய்யவில்லை என்று தமிழீழ விடுதலை இயக்கத்தின் (டெலோ) அமைப்பின் பொருளாளரும் முன்னாள் வடக்கு மாகாண சபை உறுப்பினருமான விந்தன் கனகரத்தினம் தெரிவித்தார்.

தமிழ் மக்கள் கேட்பது அரசியல் தீர்வு என்றும் குட்டிமணி, தங்கதுரை, சிறீ சபாரத்தினம் போன்றவர்களால் வழி நடத்தப்பட்ட எமது கட்சி, அரசாங்கத்தின் அற்ப சொற்ப சலுகைகளுக்காக விலை போக முடியாது என்றார். யாழ்ப்பாண ஊடக அமையத்தில் புதன்கிழமை (16) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## இந்திய - இலங்கை உறவு சகோதரத்துவமாகும்



இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையே நீண்ட கால உறவு உள்ளது என்றும் இலங்கை பொருளாதார சரிவை எதிர்கொண்ட போது, இந்தியாவின் நட்புக்கும் அப்பாற்பட்ட சகோதரத்துவத்தை உணர முடிந்தது என்றும் ஜனாதிபதியின் தேசிய பாதுகாப்பு தொடர்பான சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதியின் பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க தெரிவித்தார்.

இந்திய அரசாங்கத்தால் இலங்கைக்கு வழங்கப்பட்ட ‘டோனியர் - 228’ கடல்சார் கண்காணிப்பு விமானத்தை வருடாந்த பராமரிப்பு சேவைகளுக்காக இந்தியாவுக்கு அனுப்பி வைத்தல் மற்றும் அதற்கு மாற்றீடாக கடல்சார் கண்காணிப்பு டோனியர் விமானமொன்றை இலங்கை விமானப்படைக்கு கையளிப்பதற்காக கட்டுநாயக்க விமானப்படை தளத்தில் புதன்கிழமை (16) நடைபெற்ற நிகழ்வொன்றிலேயே சாகல ரத்நாயக்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு மேலும் தெரிவித்த அவர், “அண்மையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேற்கொண்டிருந்த இந்திய விஜயத்தின் பலனாக இருநாடுகளினதும் உறவு மேலும் வலுப்பெற்றது. அதற்கமைய எதிர்காலத்திலும் இருநாடுகளும் நெருங்கிய ஒத்துழைப்புடன் பணியாற்ற தீர்மானித்துள்ளன. ‘தொடர்பு’ என்பது மிக முக்கியமானதாகும். இது விரிவான அர்த்தத்தை கொண்ட சொற்பதமாகும். இதை வீதித் தொடர்புகள், மக்கள் இடையேயான தொடர்புகள், பொருளாதார தொடர்புகள், விநியோகத் தொடர்புகள், பாதுகாப்பு தொடர்புகள் என அர்த்தப்படுத்தலாம். விமானங்கள் மற்றும் மற்றைய இயந்திரங்களையும் பழுதுபார்க்க வேண்டிய அவசியம் ஏற்பட்டிருந்த நிலையில், மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு மத்தியில் விமானப் படையின் தேவைகளையும் பூர்த்தி செய்வது கடினமாக அமைந்திருந்தது.

புதிய தொழில்நுட்பங்களுக்கு அமைய எமது விமானங்களை வடிவமைக்க வேண்டிய தேவை இருந்தாலும், எமது பொருளாதாரச் சரிவால் அதைச் செய்ய முடியவில்லை. அந்தவகையில் எமக்கு ஒத்துழைப்பு வழங்கிய இந்திய அரசாங்கத்திற்கு மீண்டும் நன்றி தெரிவிக்கிறேன்” என்றார்.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

## இந்தியாவுக்கும் சீனாவுக்கும்...

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் இன்று (17) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் மேற்குறிப்பிட்ட விடயத்தைத் தெரிவித்த அவர் மேலும் தெரிவிக்கையில்

முன்பெல்லாம் வெவ்வேறு முதலீட்டாளர்கள் எங்களிடம் வந்து மூதலீடு குறித்து பேசி செயற்படுவர். இப்போது அப்படி இல்லை; இந்தியாவுக்குச் சென்று விற்றுவிட்டதை நாம் அறியோம். அதானியிடம் என்ன பேசினார்கள் என்றும் இந்தியா சென்ற போது என்ன செய்தார்கள் என்றும் தெரியவில்லை. அதானிக்கு என்ன விற்றார்கள் என்றும் தெரியவில்லை. இவற்றுக்கு மத்தியில் சீன ஆராய்ச்சி கப்பல் விவகாரத்தால், இந்தியா மீண்டும் குழப்பமடைந்துள்ளது.

இன்னொரு பக்கம் மக்கள் நாட்டை விட்டு வெளியேறுகிறார்கள். இன்னொரு பக்கம் இலங்கை பிள்ளைகள் சீன, ஹிந்தி மொழிகளைக் கற்க வேண்டும் என்கிறார்கள். எல்லாவற்றுக்கும் முதல் பாடசாலை கல்வியை கற்பதற்குரிய ஏற்பாடுகளை முறையாக வழங்க வேண்டும்.

பொருட்களின் விலை, மின்சாரக் கட்டணம், நீர் கட்டணம் எகிறியிருப்பதாலும், தரம் குறைந்த மருந்தாலும், மருந்தின் விலை மிக அதிகமாக உயர்ந்ததாலும் மருத்துவமனைகளுக்குச் சென்று சாக வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாலும் குழந்தைகளை பள்ளிக்கு அனுப்ப முடியாமலும் பெற்றோர்கள் தவிக்கின்றனர். இவ்வாறு இருக்கும் போது இன்று நாட்டின் பிள்ளைகள் சீன, ஹிந்தி மொழிகளை கற்கச் சொல்கிறார்கள். எனக்குத் தெரியாது, இதற்கு என்ன சொல்வது என்று?

13 ஆவது திருத்தம் குறித்து பொய்க் கதையை கட்டமைத்ததால் ஜனாதிபதிக்கு அடுத்த ஜனாதிபதி வேட்பாளர் அந்தஸ்தும் இல்லாமல் போகும் நிலையே காணப்படுகிறது. சாகர காரியவசத்தின் பேச்சுகள் அதை உணர்த்துகின்றன.

தமிழ் வாக்குகளும் முஸ்லிம் வாக்குகளும் என்னிடம் இருப்பதாகக் காட்டிக் கொண்டு, 13 ஆவது திருத்தம் குறித்து பேசி, வேட்பாளர் பதவியை கோர முயல்வதாகக் கூறப்படும் ஜனாதிபதி தேர்தல் கதை பொய்யானது; அந்த முயற்சி தோல்வியடைந்துள்ளது.

ஏனென்றால், ஜனாதிபதி சொன்னபோது, தமிழ் தேசிய கூட்டமைப்பு இவ்வாறான பதிலை வழங்கும் என்று அவர் எதிர்பார்க்கவில்லை. 13வது திருத்தத்தை அமல்படுத்துவதற்கு முன், மாகாண சபை தேர்தலை நடத்துங்கள் என்றே தமிழ்த் தேசிய கூட்டமைப்பு கோரியது. இப்போது அஸ்வெசும தலைவர் பதவியை இராஜினாமா செய்துள்ளார் அரசாங்கம் தோல்வி கண்டுள்ளது" என்றார்.

## மேர்வினுக்கு எதிரா...

இந்நிலையில் ஐக்கிய மக்கள் சக்தியின் வட்டுக்கோட்டை மற்றும் ஊர்காவற்துறை தொகுதி அமைப்பாளர் முருகவேல் சதாசிவம், மேர்வின் சில்வாவின் கருத்துக்கு எதிராக வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாட்டை பதிவு செய்துள்ளார்.

இதன்போது, இனவாத கருத்துகளை தூண்டி வன்முறையை ஏற்படுத்துவதற்கு மேர்வின் சில்வா முயல்வதாக அவர் முறைப்பாடு செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## 120 மெகாவோட்...

உமா ஓயா பல்நோக்கு வேலைத்திடத்தின் கீழ் நிர்மாணிக்கப்பட்டுள்ள டயரபா நீர்த் தேக்கத்திற்கு நீர் நிரப்பும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில், ஜனாதிபதி ஊடக மையத்தில் புதன்கிழமை (16) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு மேலும் தெரிவித்த அவர், "ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் ஆரம்பிக்கப்பட்ட நாட்டின் தேசிய உணவுப் பாதுகாப்பு வேலைத்திட்டத்துக்கு நீர்ப்பாசன அமைச்சு, விளைச்சல் நிலம் மற்றும் நீர் பராமரிப்பினூடாக பெருமளவான பங்களிப்பை வழங்குகிறது.

வரவிருக்கும் வறட்சியான வானிலையை முகாமைத்துவம் செய்வதற்கான வேலைத்திட்டங்களை தயாரிப்பது தொடர்பில் பேச்சுவார்த்தைகள் இடம்பெறுகின்றன. நீர்ப்பாசன அமைச்சின் கீழுள்ள 07 நிறுவனங்களும் ஒன்றிணைந்து வேலைத்திட்டம் ஒன்றை ஆரம்பித்துள்ளன.

வரவு-செலவு திட்டத்தில் அதற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள நிலையில், வானிலையின் பாதகமான விளைவுகளை மட்டுப்படுத்துவதற்கான வேலைத்திட்டங்களுக்காக அவற்றை பயன்படுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது" என்றார்.

# சீனா உதவும்

இறையாண்மை, சுதந்திரம் மற்றும் கண்ணியம் ஆகியவற்றைப் பாதுகாக்க சீனா உறுதியாக ஆதரவளிக்கும் என்று தெரிவித்த அவர், இலங்கையுடன் பல்வேறு துறைகளில் ஒத்துழைப்புடன் அரசாங்கத்துடன் அனுபவப் பரிமாற்றங்களை வலுப்படுத்த விருப்பம் தெரிவித்தார்.

இலங்கையின் சுதந்திரமான அபிவிருத்திக்கான திறனை மேம்படுத்துவதற்கும் அபிவிருத்தியில்லாத வறுமைப் பொறியிலிருந்து விடுபடுவதற்கும் தாங்கள் ஆதரவளிப்பதாகவும் உறுதியளித்தார்.

வறுமை மற்றும் வளர்ச்சியற்ற நிலையில் இருந்து இலங்கையை விடுவித்து, அதன் தொழில்மயமாக்கல் செயன்முறை மற்றும் விவசாய நவீனமயமாக்கலை விரைவுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும் அவர் உறுதியளித்தார்.

இதேவேளை, இலங்கையின் சுதந்திரம், இறையாண்மை, பிராந்திய ஒருமைப்பாட்டைப் பாதுகாப்பதில் சீனாவின் உறுதியான ஆதரவுக்காகவும், கடினமான காலங்களில் இலங்கைக்கு சரியான நேரத்தில், பயனுள்ள உதவிகளுக்காகவும் சீனாவுக்கு பிரதமர் குணவர்தன நன்றி தெரிவித்தார்.

## காணிகளை பறிப்போர்...

13ஆவது திருத்தச் சட்டம் அமல்படுத்தப்படுமாக இருந்தால் முஸ்லிம் மக்களுக்கு கிடைக்கக்கூடிய உரிமைகளை பெற்றுத்தருவார்கள் என்று எதிர்பார்ப்பு நிராசையாக போய்விட்டதாகவும் ஆர்ப்பாட்டக்காரர்கள் குறிப்பிட்டனர்.

தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் போன்ற அரசியல்வாதிகள் இன்று களத்தில் இறங்கி, இனவாதத்துடன் 25 ஏக்கர் தனியார் காணியை, மகாவலி காணி என்றும் அரச காணி என்றும் அடையாளப்படுத்தியுள்ளனர்.

முஸ்லிம்களின் காணிகளை பராமரிப்பதற்கு தடையாக இருப்பவர்கள் 13ஆவது சட்டம் அமலுக்கு வருகின்ற போது மட்டக்களப்பு மாவட்டத்தில் இருக்கின்ற முஸ்லிம்களின் கச்சைத் துணிகளைகூட உருவிவிட்டு அனுப்பக்கூடிய வாய்ப்புகள் அதிகம் இருப்பதால், நாங்கள் இந்தச் சட்டம் திருத்துவதை அனுமதிக்க மாட்டோம் என்று ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டோர் தெரிவித்தனர்.

ஓட்டமாவடி, நாவலடியில் பதாதைகளை ஏந்தி ஆரம்பமான ஆர்ப்பாட்ட பேரணி, மட்டக்களப்பு - கொழும்பு பிரதான வீதிவழியாக வாகன தொடரணியாக வந்து ஓட்டமாவடி பிரதேச சபை முன்பாக முடிவடைந்தது.

இவ் ஆர்ப்பாட்ட பேரணியில் ஓட்டமாவடி பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினர்கள், சமூக செயற்பாட்டார்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

## மிகக் குறைந்த...

சர்வதேச நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட கடன் வசதி திட்டத்தில் வருவாயை அதிகரிப்பதற்கான உடன்பாட்டையும் இலங்கை உள்ளடக்கியுள்ளதாகவும் நிதியத்தின் வருமான இலக்குகள் தொடர்பான 12 நிகழ்ச்சி திட்டங்களில் 3 திட்டங்களை மட்டுமே இலங்கை எட்டியுள்ளதாகவும் சுட்டிக்காட்படபட்டுள்ளது.

அரசாங்க வருமானத்தை ஈட்டுவதில் வரி வருவாய் கணிசமான பங்கை வகிக்கின்ற நிலையில், இந்த ஆண்டு வரி வருமானம் 3 ஆயிரத்து 130 பில்லியன் ரூபாயாக இருக்கும் என அரசாங்கம் மதிப்பிட்டுள்ளது.

எனினும், இவ்வருட இறுதிக்குள் இலங்கை அரசாங்கத்தின் கணிப்பை விட குறைந்த வருமானத்தை அதாவது 2 ஆயிரத்து 940 பில்லியன் ரூபாய் வரி வருவாயைப் பெறும் என சர்வதேச நாணய நிதியம் மதிப்பீடுகளை மேற்கொண்டுள்ளது.

எனினும், வருடத்தின் முதல் காலாண்டில் 578 பில்லியன் ரூபாய் மாத்திரமே உண்மையான வரி வருவாயாக வசூலிக்கப்பட்டுள்ளதாகவும், இதன்படி வருட இறுதிக்குள் 2 ஆயிரத்து 762 பில்லியன் ரூபாவை மட்டுமே ஈட்டமுடியும் என்றும் நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

## சீனி வாங்குவதற்காக...

அவர் மேலும் தெரிவிக்கையில், "எமது கட்சியின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன், வவுனியா, நைனாமடுவில் சீனி தொழிற்சாலையை கேட்டார் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, மன்னார் மாடு மாதா திருத்தலத்தில் செவ்வாய்க்கிழமை (15) தெரிவித்தது எமக்கு ஆச்சரியத்தை ஏற்படுத்தியது.

வவுனியா, நயினாமடுவில் சீனி தொழிற்சாலை ஒன்று அமைக்கப்பட போவதாக அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடகங்களில் ஏற்கெனவே பல செய்திகள் வெளிவந்த நிலையில் சீனி தொழிற்சாலைக்கும் எமது கட்சிக்கும் தொடர்பு இருப்பதாகவும் செய்திகள் வெளிவந்தன. ஆனால் இன்று அது உண்மையாகி விட்டது.

சீனித் தொழிற்சாலையை எமது கட்சி தான் கேட்டது என பிரதேச அமைப்பாளர்களுக்கோ தலைமை குழு உறுப்பினர்களுக்கோ தெரியாது. அது பற்றிய எம்மிடம் பேசவும் இல்லை. ஜனாதிபதி கூறிய போது தான் எமக்கு ஆச்சரியம் ஏற்பட்டது.

தமிழ் மக்களுக்களின் அரசியல் தீர்வுக்காக ஆயுதம் ஏந்திப் போராடிய நாம் ஆயுதங்கள் மௌனிக்கப்பட்டு அரசியல் நீரோட்டத்தில் தமிழ் மக்களின் தீர்வுக்காக பல்வேறு போராட்டங்களை நடத்தி வருகிறோம்.

இவ்வாறான நிலையில், எமது அரசியல் தீர்வுகளை புறந்தள்ளிவிட்டு அரசாங்கத்திடம் சீனி கேட்பதற்காக மக்கள் அங்கிகாரம் தரவில்லை.

யுத்தத்தில் காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு தீர்வு வழங்கவில்லை; சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் முழுமையாக விடுவிக்கப்படவில்லை; ஜெனிவா தீர்மானங்கள் நடைமுறைப் படுத்தப்படவில்லை; தமிழ் மக்கள் எதிர்பார்க்கின்ற சமஷ்டி தீர்வு வழங்கப்படாத நிலையில் சீனி தொழிற்சாலையை அரசாங்கத்திடம் கேட்டது ஏன்" என்றும் கேள்வி எழுப்பினார்.

## குருந்தூர்மலைக்கு அணி...

குருந்தூர் மலையில் இன்று (18) இடம்பெறவுள்ள பொங்கல் நிகழ்வு தொடர்பில் முல்லைத்தீவு ஊடக அமையத்தில் வியாழக்கிழமை (17) இடம்பெற்ற ஊடக சந்திப்பிலே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

மேலும் கருத்து தெரிவிக்கையில், "வரலாற்று சிறப்பு மிக்க வன்னி பெருநிலபரப்பிலே தொன்மை வாய்ந்த ஆலயங்களில் ஒன்றான குருந்தூர்மலை ஆதி சிவன் ஐயனார் ஆலயத்தினுடைய பொங்கல் நிகழ்வு எதிர்வரும் 18 ஆம் திகதி பிரமாண்டமான முறையிலே இடம்பெறவுள்ளது.

கடந்த சில காலங்களாக முரண்பாடுகள் காரணமாக பொங்கல் நிகழ்வை குழப்பியிருந்தார்கள். இருப்பினும் முல்லைத்தீவு மாவட்ட நீதவான் நீதிமன்றத்திலே தாக்கல் செய்யப்பட்ட வழக்கின் பிரகாரம் நீதிமன்ற தீர்ப்பின் அடிப்படையிலே ஆலயத்தினுடைய பொங்கல் நிகழ்வினை எவ்வித இடையூறும் இல்லாது நடாத்துவதற்கு நீதிமன்றம் தீர்ப்பளித்திருக்கின்றது.

இந்த தீர்ப்பின் அடிப்படையிலே முல்லைத்தீவு மாவட்டத்தின் இருப்பையும் தொன்மையையும் பாரம்பரிய வழிபாட்டு முறையான பொங்கல் நிகழ்வினை நடாத்துவதற்கு ஆலய பரிபாலனசபையினர் தீர்மானித்திருக்கின்றனர்.

எனவே, தாயக பிரதேசத்திலே வாழுகின்ற அனைத்து தமிழ் உறவுகளும் அதாவது வன்னி பெருநிலப்பரப்புக்கு அப்பால் வடக்கு, கிழக்கிற்கிலே வாழுகின்ற தமிழ் மக்கள் அனைவரும் வருகை தந்து பொங்கல் நிகழ்வினை சிறப்பிக்கவும் தமிழ் மக்களின் இருப்பினை நிலைநாட்டவும் அனைவரையும் வருகைதருமாறும் அழைத்து நிற்கின்றோம்" என்றார்.

## எந்த முயற்சியும்...

தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகளை தீர்த்து வைப்பதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் மேற்கொள்ளப்படும் செயற்பாடுகளையும், பரிந்துரைகளையும் வரவேற்றுள்ள அவர், குறித்த முன்னெடுப்புகள் அர்த்தபூர்வமானவையாக அமைய வேண்டுமாயின் தமிழ் மக்கள் எதிர்கொள்ளும் நடைமுறைப் பிரச்சினைகள் தொடர்பாக விரைவான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டும் எனவும் வலியுறுத்தியுள்ளார்.

அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்டம் அமல்படுத்தல் தொடர்பில், ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி சார்பாக புதன்கிழமை (16) ஜனாதிபதிக்கு கையளிக்கப்பட்டுள்ள பரிந்துரைகளிலேயே குறித்த விடயம் வலியுறுத்தப்பட்டுள்ளது.

குறிப்பாக, தொல்லியல் திணைக்களம், வனவளப் பாதுகாப்பு, வனஜீவராசிகள் திணைக்களம் போன்றவற்றின் சில முறையற்ற செயற்பாடுகள் தமிழ் மக்களின் உணர்வுகளை பாதிக்கும் வகையில் இருப்பதாக குறித்த ஆவணத்தில் அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார். தொல்லியல் ஆய்வு செயற்பாடுகள் அந்தந்த மாவட்டத்தினை சேர்ந்த வரலாற்றுத்துறை நிபுணர்களின் பங்குபற்றுதல் மற்றும் கலந்தாலோசனைகளின் அடிப்படையில் முன்னெடுக்கப்பட வேண்டுமே தவிர, தொல்லியல் திணைக்களத்தின் கொழும்பு அலுவலகத்தில் இருக்கின்ற உயர் அதிகாரிகள் சிலரின் விருப்பு வெறுப்பு சார்ந்த முன்னெடுப்புகளாக அமைவதை அனுமதிக்க கூடாது எனவும் தெரிவித்துள்ளார்.

பறாளை முருகன் ஆலயம், கீரிமலை தீர்த்தக் குளம், பருத்தித்துறை இறங்கு துறை போன்ற பகுதிகளை, தொல்லியல் திணைக்களத்தால் பாதுகாக்கப்பட வேண்டிய பிரதேசங்களாக அடையாளப்படுத்தி, அண்மையில் வர்த்தமானி வெளியிடப்பட்ள்ளமை தொடர்பாக குறித்த ஆவணத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

துறைசார் நிபுணர்கள், சம்மந்தப்பட்ட பிரதேசத்தினை தொல்லியல் திணைக்கள அதிகாரிகள் போன்ற யாருடைய கருத்துகளும் உள்வாங்கப்படாமல் கொழும்பு அதிகாரிகளால் வெளியிடப்பட்டுள்ள குறித்த வர்த்தமானியில் உள்ளடக்கப்பட்டுள்ள பறாளை முருகன் ஆலயம் தொடர்பில் முன்வைக்கப்பட்டுள்ள காரணங்கள் தவறானவை என்பதை வரலாற்றுத் துறை நிபுணர்கள் தெரிவித்துள்ளதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அதேபோன்று, வனவளப் பாதுகாப்பு மற்றும் வனஜீவராசிகள் திணைக்களம் ஆகியவற்றின் செயற்பாடுகள் சிலவும், தற்போதைய ஜனாதிபதி மற்றும் அரசாங்கத்தின் கொள்கை ரீதியான தீர்மானங்களுக்கு மாறாக வடக்கு - கிழக்கு பிரதேசங்களில் முன்னெடுக்கப்படுவதாகவும் இவ்வாறான விடயங்கள் தொடர்பாக ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்ளாமல், முன்னெடுக்கப்படுக்கின்ற எவ்வகையான முயற்சிகளும் வெற்றியளிக்காது; தேசிய நல்லிணக்கத்தினை வலுப்படுத்த உதவாது எனவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

## இந்திய - இலங்கை உறவு சகோதரத்துவமாகும்

இலங்கை அரசாங்கத்தின் கோரிக்கைக்கு இணங்க, இந்திய கடற்படையின் 'டோனியர் - 228' கடல்சார் கண்காணிப்பு விமானம் 2022 ஒகஸ்ட் 15 ஆம் திகதி இரண்டு வருட காலத்துக்கு இலங்கை விமானப்படையிடம் கையளிக்கப்பட்டது. மேற்படி கடல்சார் கண்காணிப்பு விமானம் ஒரு வருடம் தொடர் சேவையை முன்னெடுப்பதற்கு சிறந்த பங்களிப்பை வழங்கியிருந்ததோடு, விமானத்தின் வருடாந்த பராமரிப்புக்காக இந்தியாவிற்கு அனுப்பப்பட்டுள்ளது.

அந்த விமானத்திற்கு மாற்றீடாக மற்றுமொரு 'டோனியர் - 228' கடல்சார் கண்காணிப்பு விமானம் இலங்கை விமானப்படைக்கு வழங்கப்பட்டுள்ளது.

## 2 தலையணைகள்...

பாராளுமன்றத்தின் உணவு வழங்கல் மற்றும் பராமரிப்புத் திணைக்களத்தில், சில அழகான இளம் பெண் பணியாளர்கள் பாலியல் வன்கொடுமைக்கு உட்படுத்தப்பட்டதாக அதிகாரிகள் குழுவொன்று குற்றம் சாட்டப்பட்டது. அதன் விளைவாக குழு அறைகள் சமீபத்தில் சோதனை செய்யப்பட்டன.

இதற்கிடையில் பாலியல் துன்புறுத்தல் குற்றச்சாட்டுகளை விசாரிக்க நியமிக்கப்பட்ட மூவரடங்கிய குழு தொடர்ந்து விசாரணைகளை நடத்தி வருகிறது.

இது தொடர்பாக பெண் ஊழியர்கள் உட்பட கிட்டத்தட்ட 20 பேரின் வாக்குமூலங்களை குழு ஏற்கெனவே பதிவு செய்துள்ளதாக பாராளுமன்ற வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை இந்த விசாரணைகளுக்கு இடையூறு விளைவிப்பதற்கும் செல்வாக்கு செலுத்துவதற்கும் அதிகாரிகள் குழுவொன்று இரகசியமாக செயற்பட்டு வருவதாகவும் அது தொடர்பில் பாராளுமன்ற அதிகாரிகள் விசேட கவனம் செலுத்தியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

சம்பவம் தொடர்பில் பக்கச்சார்பற்ற விசாரணை நடத்தி அறிக்கை வழங்குமாறு விசாரணைக் குழுவிற்கு பாராளுமன்றத்தின் செயலாளர் நாயகம் திருமதி குஷானி ரோஹணதீர அண்மையில் ஆலோசனை வழங்கியிருந்தார்.

இந்நிலையில், இந்தச் செய்தி பொய்யானது என செயலாளர் நாயகம் திருமதி குஷானி ரோஹணதீர தெரிவித்துள்ளார்.

## ஜூலையில் தேயிலை...

2022 ஆம் ஆண்டின் தொடர்புடைய காலகட்டத்துடன் ஒப்பிடுகையில் தேயிலை உற்பத்தியில் கணிசமான அதிகரிப்பு காணப்படுவதாகவும் குறிப்பிட்டுள்ளனர்.

எவ்வாறாயினும், 2021ஆம் ஆண்டு ஜூலை மாத்தில் 26.38 மில்லியன் கிலோ கிராமாக தேயிலை உற்பத்தி பதிவாகியிருந்த நிலையில், 2023ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் 5.01 மில்லியன் கிலோ கிராம் குறைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## குருந்தூர்மலையில் சிவாலயம்...

இன்றையதினம் (18) குருந்தூர் மலையில் சைவர்கள் பொங்கலில் ஈடுபடவுள்ள நிலையில், அது தொடர்பாக கலந்துரையாடல் இடம்பெறவில்லை என ஊடகங்களின் கேள்விக்கு பதிலளித்தனர்.

இதன்போது ஆரியகுளம் நாக விகாராதிபதி, குருந்தூர் மலை விகாராதிபதி, தையிட்டி விகாராதிபதி, நாவற்குழி விகாராதிபதி உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர்.

## கல்வி முறையை...

நுகேகொடை அனுலா வித்தியாலயத்தின் 2019/2020 வருடாந்த பரிசளிப்பு விழாவில் புதன்கிழமை (16) பிற்பகல் கலந்து கொண்டபோதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு மேலும் கருத்துத் தெரிவித்த ஜனாதிபதி, "சமுதாயத்துக்கு ஏற்ற கல்வி முறை இல்லாமல், ஒரு நாடு முன்னேற முடியாது. நாட்டைக் கட்டியெழுப்ப வேண்டுமெனில், நல்ல எதிர்கால சந்ததியை உருவாக்க வேண்டும். சவால்களை முறியடிக்கக்கூடிய எதிர்கால சந்ததியை உருவாக்குவதற்கான அடிப்படை நடவடிக்கைகளை கல்வியால் மாத்திரமே மேற்கொள்ள முடியும்.

எதிர்காலத்தைப் பற்றி சிந்திக்கக்கூடிய, எதிர்காலத்தைப் பற்றிய புரிதல் கொண்ட கல்வி முறைமையை நம் நாட்டில் உருவாக்க வேண்டும்.

எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய காலநிலை மாற்றத்தின் சவால்களை எதிர்கொள்ள நாம் தயாராக வேண்டும். உலகில் ஏற்படும் காலநிலை மாற்றத்தை கவனமாக ஆய்வு செய்ய வேண்டும். ஐரோப்பா தீப்பற்றி எரியும் அளவுக்கு வெப்பநிலை அதிகரித்துள்ளது.

அதனால் தான், ஐக்கிய நாடுகள் சபை காலநிலை மாற்ற நிகழ்ச்சி நிரலை நடைமுறைப்படுத்தும் காலத்தை 10 ஆண்டுகள் பின்னுக்குத் தள்ளி, அதனை துரிதப்படுத்த அறிவுறுத்தல்களை வழங்கியுள்ளது.

மற்றைய விடயம், உலகப் பொருளாதாரம் விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பத்தின் அடிப்படையில் அமைந்த பல்வேறு துறைகளைச் சார்ந்துள்ளது.செயற்கை நுண்ணறிவு, ரோபோ தொழில்நுட்பம், வலு சக்தி சேமிப்பு, பிளொக் செயின் தொழில்நுட்பம், ஜெனொம் விஞ்ஞானம் ஆகிய சில துறைகள் மாத்திரம் உலகப் பொருளாதாரத்தில் தாக்கம் செலுத்துகின்றது. அதற்கு நாமும் தயாராக வேண்டும்" என்றார்.

# இலங்கையில் சீனாவின் உதவிகள் ஆபத்தானவை

■ பு.கஜிந்தன்

இலங்கையில் அதுவும் தமிழ் மக்களுக்கு சீனாவால் வழங்கப்படுகின்ற உதவிகள் இந்தியாவை சீண்டுவதற்காக வழங்கப்படுகின்ற நிலையில், எதிர்காலத்தில் ஆபத்துகளை ஏற்படுத்தும் என வட மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் விந்தன் கனகரத்தினம் தெரிவித்தார்.

நேற்றையதினம் புதன்கிழமை யாழ்ப்பாண ஊடக அமையத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இலங்கையில் இடம்பெற்ற இறுதி யுத்தத்தில் தமிழ் மக்களை கொன்று குவிப்பதற்கு சீனா பெரும் பங்காற்றியது. தற்போது அபிவிருத்தி என்ற போர்வையில் இந்தியாவை




கண்காணிப்பதற்காக இலங்கையை தமது கேந்திர நிலையமாக்கும் முயற்சியில் சீனா இறங்கி உள்ளது.

அதன் ஏற்பாடாக வடக்கில் உள்ள பல்கலைக்கழகங்களுக்கு உதவிகளையும் மீனவர்களை முன்னேற்ற போகிறோம் என கடல் அட்டைப் பண்ணைகளை சீனா திட்டமிட்டு பாரிய நிதிகளை செலவு செய்து வருகிறது.

உண்மையில் சீனா உதவி செய்ய வேண்டும் என்றால் இலங்கையில் தமது இருப்புகளை தக்க வைக்கும் செயற்பாடுகளை மேற்கொள்ள வேண்டிய தேவை இல்லை. தமிழ் மக்களுக்கு எதிரான இறுதிச் யுத்தத்தில் அதிக அளவிலான ஆயுதங்களை வாரி வழங்கி, எமது மக்களை கொன்று அழித்ததில் சீனாவுக்கு பெரும் பங்கு உள்ளது.

இவ்வாறான நிலையில் யுத்தம் நிறைவடைந்த பின்னர் தமிழ் மக்களை அழித்த நன்றிக்காக, ஹம்பாந்தோட்டை துறைமுகத்தை இலங்கை அரசாங்கம் சீனாக்கு நீண்ட கால குத்தகைக்கு வழங்கியது.

இவ்வாறு சீனாவுக்கு வழங்கப்பட்ட ஹம்பாந்தோட்டை துறைமுகத்தில் எதிர்வரும் மாதம் அளவில் சீனாவின் மிகப் பெரிய இராணுவ ஆய்வுக் கப்பல் வர உள்ளதாக செய்தி வெளியாகியுள்ளது. அதேபோல, ஹம்பாந்தோட்டையில் சீனாவின் படைத்தளம் ஒன்று விரைவில் ஆரம்பிக்கப்பட உள்ளதான செய்திகளும் வெளியாகியுள்ளன.

சீனா, இலங்கைக்கு உதவி செய்யும் போர்வையில் இந்தியாவுக்கு எதிரான போரை எவ்வாறு வெற்றி கொள்ளலாம் என்ற போர்வையில் தமது இருப்பை இலங்கையில் தக்க வைத்துக் கொள்வதற்கும் கடற்பரப்பில் அதற்கான வேலை திட்டங்களையும் மேற்கொண்டு வருகின்றது.

சீனா, உதவிகளை வழங்கினால் மக்கள் தம்மை ஏற்றுக் கொள்வார்கள் என இணைக்கிறது. மக்கள் அவ்வாறு ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். எமது அயல் நாடான இந்தியாவில் வாழ்கின்ற எட்டு கோடி எமது தொப்புள் கொடி உறவுகளுக்கு எதிராக சீனா செயற்பட நினைத்தால் அதனை ஒன்று திரண்டு எதிர்ப்போம் என அவர் மேலும் தெரிவித்தார்.

## சுற்றுலாத் துறைக்கான நிலையான கழிவு முகாமைத்துவ நடவடிக்கைளை

# SLTDA, USAID ஆரம்பிக்கிறது

இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை (SLTDA) மற்றும் USAID ஆகியவை முக்கிய பொது மற்றும் தனியார் துறை பங்குதாரர்களுடன் இணைந்து சுற்றுலாத்துறைக்கான புதிய நிலையான கழிவு முகாமைத்துவ செயற்பாட்டை அண்மையில் ஆரம்பித்துள்ளன. இத்திட்டத்தில் சேருமிடத்தில் குப்பை சேகரிப்பு, தரம் பிரித்தல், சேமிப்பு, மீள்சுழற்சி மையத்துக்கு கொண்டு செல்லுதல் மற்றும் மீள்சுழற்சி செய்தல் ஆகியவை அடங்கும். திண்மக்கழிவுகளை அகற்ற உள்ளூராட்சி நிர்வாகத்திடம் வழங்க வேண்டும். சுற்றுலாவுக்குப் பொறுப்பான பொலிஸார், அவ்வப் பகுதி சுற்றுலா சங்கங்களுடன் ஒருங்கிணைத்து, ஒவ்வொரு பகுதிக்கும் ஒரு திட்டத்துடன் பாதுகாப்பை உறுதி செய்வார்கள்.

முதற்கட்டமாக, சிகிரியா, எல்ல, பெந்தோட்ட, பாசிக்குடா, நீர்கொழும்பு ஆகிய ஐந்து முக்கிய சுற்றுலாப் பிரதேசங்களில் இத்திட்டம் ஆரம்பிக்கப்படவுள்ளதுடன், சுற்றாடல் மற்றும் சுற்றுலா பொலிஸார், உள்ளூராட்சி அதிகாரிகள், பிராந்திய சுற்றுலா சங்கங்கள் மற்றும் இரண்டு முன்னணி தனியார் துறை நிறுவனங்களான சிலோன் கோல்ட் ஸ்டோர்ஸ், விரிடிஸ் பிரைவேட் லிமிடெட் ஆகியவற்றால் ஆதரிக்கப்படும்.

சுற்றுலா இலங்கையின் பொருளாதாரத்திற்கு முக்கியமானது என்பதால் கழிவு முகாமைத்துவ நிபுணர்கள், கொவிட் தொற்றுநோயிலிருந்து விடுபட்டு பொருளாதார நெருக்கடியைக் கையாள்கின்றனர். தொற்றுநோய்க்கு முந்தைய சுற்றுலா, நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 12 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்தியது, 2018 இல் 4.3 பில்லியன் அமெரிக்க டொலரை வருமானமாக ஈட்டியது. சுற்றுலா மீண்டும் மீண்டு வருகிறது, மேலும் ஒகஸ்ட் ஆரம்பத்தில் இலங்கைக்கு வரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை 800,000 தாண்டி கடந்த ஆண்டின் வருகையையும் விஞ்சியது, மேலும் எதிர்பார்க்கப்படும் வளர்ச்சியை ஆதரிக்கும் வகையில் நாட்டில் நிலையான நடைமுறைகள் இருப்பதை உறுதி செய்ய வேண்டும்.

“எதிர்காலத்தில் சுற்றுலாத் தலங்களின் மேம்பாட்டுக்கான ஒரு முக்கியமான சந்தைப்படுத்தல் கருவியாகவும், வேறுபடுத்தும் காரணியாகவும் நிலைத்தன்மை காணப்படுகின்றது, மேலும் கழிவு முகாமைத்துவத்துக்கான பொதுவான செயற்றிட்டத்தில் பொதுத்துறை மற்றும் தனியார் துறை நிறுவனங்களின் ஆதரவு மற்றும் அர்ப்பணிப்பால்



நாங்கள் பெரிதும் ஊக்குவிக்கப்படுகிறோம்” என SLTDA இன் பிரதிப் பணிப்பாளர் நாயகமும், நிலைத்தன்மை பிரிவின் தலைவருமான உபாலி ரத்நாயக்க தெரிவித்தார்.

நிலையான கழிவு முகாமைத்துவ முன்முயற்சியின் ஆரம்பமானது USAID இன் இந்தோ-பசிபிக் வாய்ப்பு திட்டத்தில் (IPOP) ஒரு வலுவான முன்னோக்கிய நகர்வு ஆகும். இது நிலைத்த தன்மையில் சிறப்பு கவனம் செலுத்துகிறது. மற்றும் இலங்கையின் சுற்றுலாத் துறைக்கான நிலையான கட்டமைப்பை உருவாக்க SLTDA உடன் ஒத்துழைக்கிறது.

“இன்றைய நிகழ்வானது நிலைத்த தன்மை கட்டமைப்பிற்கான விளைவுகளைச் சரிபார்க்கும் எங்களது முந்தைய முயற்சிகளின் நேரடி விளைவாகும். மேலும் சுற்றுலாத் துறையின் முக்கிய அம்சமான கழிவு மேலாண்மையில் அனைத்து பங்குதாரர்களிடமிருந்தும் இன்று நாம் கண்டுள்ள அர்ப்பணிப்பால் நாங்கள் பெரிதும் ஊக்குவிக்கப்படுகிறோம்.

இன்று, சுற்றாடல் உணர்வுடன் கூடிய செயற்பாடுகள் மூலம் இலங்கை நிலைத்தன்மை மற்றும் காலநிலை மீள்திறன் ஆகியவற்றிற்கு பெயர் பெற்ற இடமாக மாறுவதை உறுதிசெய்வதில் நாங்கள் ஒரு சிறந்த ஆரம்பத்தைக் கொடுத்துள்ளோம்” என USAID-IPOP திட்டத்தின் நிலைத்த தன்மைக்கான தலைவர் பியுமி கல்யாணவன்ச தெரிவித்தார்.

பொருளாதார சீர்திருத்தங்களை ஆதரிப்பதற்கும் இலங்கையில் வெளிநாட்டு நேரடி முதலீட்டை ஊக்குவிப்பதற்கும் USAID/ IPOP இன் கீழ் சுற்றுலா நடவடிக்கைகளை ஜூலை 2022 இல் தொடங்கியது. சுற்றுலாத் துறையில் வெளிநாட்டு நேரடி முதலீட்டை விரைவாகக் கண்காணிப்பதற்கும் ஈர்ப்பதற்கும் புதிய கொள்கைகள் மற்றும் நடைமுறைகளை நெறிப்படுத்தவும் செயற்படுத்தவும் இந்த இரண்டாண்டுத் திட்டம் SLTDA க்கு உதவுகிறது. USAID -இந்தோ பசிபிக் திட்டத்தின் நிலைத்த தன்மை குறித்து தலைவர் பியுமி கல்யாணவன்ச நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றினார்.

# “முதுகெலும்பாக இருந்து வருகிறனர்”



■ ஏ.எம்.ஜலீல்

தேயிலைக்கு 150 வருடங்கள் ஆனாலும் மலையக மக்களுக்கு 200 வருடங்களாகும். அந்தவகையில் அவர்கள் மூலமாகப் பெறப்பட்ட தேயிலை ‘சிலோன் டீ’ எனும் பெயரின் மூலமாகவே உலகநாடுகள் இலங்கையை அறிந்துகொண்டன. சிலோன் டீ ஏற்றுமதியால் இலங்கைக்கு அந்நிய செலவாணி கிடைத்துவருகின்றது. இந்நிலையில் இலங்கையின் பொருளாதார வளர்ச்சிக்கு மலையக மக்களே அன்றிலிருந்து முதுகெலும்பாக இருந்துவருகிறனர் என்று மாற்றுக் கொள்கைகளுக்கான நிலைய (CPA) இணைப்பாளர் எம்.பிரதீபன் தெரிவித்தார்.

மாற்றுக் கொள்கைக்கான நிலையம், மாத்தளை சர்வதேச மகாத்மா காந்தி ஞாபகார்த்த மண்டபத்தில் கடந்த வெள்ளிக்கிழமையும் (11), சனிக்கிழமையும் (12) ‘தேயிலைச் சாயம்’ எனும் தொனிப்பொருளில் ஏற்பாடு செய்த புகைப்படக் கண்காட்சியை பார்வையிட வருகை தந்த மாணவர்கள், ஆசிரியர்களுக்கு இதுதொடர்பான விளக்கமளிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் விளக்குகையில் கூறியதாவது:

மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம், கடந்த 25 வருடங்களுக்கு மேலாக சிறுபான்மை மக்களின் மொழி மற்றும் மனித உரிமைகளுக்காகச் செயற்பட்டுவருவதோடு புதிய அரசியல் கலாசாரமொன்றை ஏற்படுத்தும் நோக்கிலும் மலையக மக்களுக்கு முகவரியை ஏற்படுத்துவதிலும் உருவாக்கப்பட்ட சிவில் அமைப்பு என்பதுடன் ஏனைய சிவில் சமூக செயற்பாட்டாளர்களின் ஒத்துழைப்போடு சகல மக்களுக்கான ஆக்கபூர்வமான பணிகளை முன்னெடுத்துள்ளது. இதன் ஓர் அங்கமாக இம்மக்களின் வாழ்வியல் நிலைமையை அனைவருக்கும் உணர்த்தும் வகையில் நுவரெலியா, பதுளை உட்பட பல இடங்களில் ‘தேயிலைச் சாயம்’ எனும் தொனிப்பொருளில் புகைப்படக் கண்காட்சிகளை நடத்தியுள்ளது என்றார்.

மேலும், மலையக மக்களின் 200 வருடகால வாழ்வுப் பூர்த்தியையொட்டி புகைப்படங்கள் மூலமாக மலையக மக்களின் வாழ்வியலில் அனைத்து நிலைமைகளையும் விளக்க புகைப்படக் கலை சிறந்த ஏற்பாடு என எமது அமைப்பு கருதி, அது தொடர்பான கலந்துரையாடல்களை நடத்தியும் எமது இளைஞர்களுக்கு இக்கலையை பயிற்றுவித்து புகைப்படக்கருவிகளையும் பெற்றுக் கொடுத்து அவர்கள் மூலமாக சேகரிக்கப்பட்ட சுமார் 4,500 புகைப்படங்களில் தெரிவுசெய்யப்பபட்ட 100 முக்கிய படங்கள் கண்காட்காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன என்றார்.

# திருமுறிகண்டி மது விற்பனை நிலையத்துக்கு மக்கள் எதிர்ப்பு

■ நடராசா கிருஸ்ணகுமார்

முல்லைத்தீவு, திருமுறிகண்டியில் மாவட்ட அனுமதிகள் எவையுமின்றி உணவகத்துடன் கூடிய மது விற்பனை நிலையத்துக்கு மக்கள் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர். கடந்த 15 நாள்களுக்கு முன்னர், திருமுறிகண்டியில் இம் மது விற்பனை நிலையம் திறக்கப்பட்டுள்ளது.

திருமுறிகண்டி கிராம அலுவலர் பிரிவில் 565 குடும்பங்கள் வாழ்கின்றன. அறிவியில்நகர் பல்கலைக்கழகம், ஆடைத் தொழிற்சாலைகள், ஆலயங்கள், பொதுமக்கள் செறிந்து வாழும் பகுதியில் இம் மது விற்பனை நிலையம் திறக்கப்பட்டுள்ளது.

திருமுறிகண்டி பிரதேசம் புனித பிரதேசமாக அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் திறக்கப்பட்டுள்ள மது விற்பனை நிலையம் தொடர்பாக முல்லைத்தீவு மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் ஆராயப்பட்டது.

மாவட்டச் செயலகம், ஒட்டுசுட்டான் பிரதேச செயலகம், புதுக்குடியிருப்பு பிரதேச சபை ஆகியவற்றில் இருந்து எவ்வித அனுமதிகளும் வழங்கப்படாத நிலையில் மத்திய சுற்றாடல் அமைச்சின் அனுமதியுடன் இம் மது விற்பனை நிலையம் திறந்து இயங்கி வருகின்றது.

பல்கலைக்கழகத்திற்கு இரவு வேளைகளில் கூட மாணவ, மாணவிகள் வருகை தரும் நேரத்தில் அறிவியல்நகர் சந்தியில் மது போதையில் நபர்கள் நடனமாடி வருவதாகவும் ஒரு கல்விச் சூழலில் மது விற்பனை நிலையம் இருக்கக் கூடாது; பொருத்தமற்ற இடத்தில் மது விற்பனை நிலையம் அமைந்திருப்பதன் காரணமாக குறித்த மது விற்பனை நிலையத்தினை இடமாற்றுமாறு தொடர்ச்சியான போராட்டம் ஒன்றிற்கு திருமுறிகண்டி கிராம மக்களும் பொது அமைப்புகளும் ஏற்பாடு செய்து வருகின்றன.

# கருத்தமர்வு



■ அ. அச்சுதன், தீஷான் அஹமட்

திருகோணமலை மாவட்ட பெண்கள் வலையமைப்பால் அரச காணி சட்டங்களும் அவற்றின் நடைமுறைப் பிரயோகங்களும் தொடர்பான கருத்தமர்வு காணி உத்தியோகத்தர்களுக்கு வியாழக்கிழமை (17) திருகோணமலையில் நடைபெற்றது. இக் கருத்தமர்வின் போது காணிகள் தொடர்பான சுற்றறிக்கை கொண்ட புத்தகம் கையளிக்கப்பட்டது. இதற்கு சிறப்பு விருந்தினர்களாக வீதி அபிவிருத்தி மற்றும் காணிகள் அபிவிருத்தி திறன் மற்றும் மனித வலு அபிவிருத்தி மகளிர் விவகாரம் மற்றும் நீர்வழங்கல் அமைச்சு செயலாளர் ஏ.மன்சூர், தம்பலகாமம் உதவி பிரதேச செயலாளர் ஆர். பிரசாந்தன், கோமரகடவல உதவி பிரதேச செயலாளர் எஸ். கமல்ராஜ், சட்டமா அதிபர் திணைக்களத்தின் அரச சட்டவாதி தேவவிதுரன், திருகோணமலை மாவட்ட பெண்கள் வலையமைப்பின் இணைப்பாளர் பிரசாந்தினி உதயகுமார் மற்றும் காணி உத்தியோகத்தர்களும் கலந்துகொண்டார்கள்.

# சித்த மருத்துவ பீடம் அங்குரார்ப்பணம்

■ அபு அலா

திருகோணமலை வளாக சித்த மருத்துவ அலகு, சித்த மருத்துவ பீடமாக 2023.06.14 ஆம் திகதி வர்த்தமானி அறிவித்தல் மூலம் தரமுயர்த்தப்பட்டது. இதனை அங்குரார்ப்பணம் செய்து வைக்கும் நிகழ்வு வெள்ளிக்கிழமை (18) காலை 9 மணிக்கு திருமலை வளாக சித்த மருத்துவ பீடத்தில் நடைபெறவுள்ளது.

கிழக்கு பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் வ.கனகசிங்கம் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வுக்கு திருகோணமலை வளாக முதல்வர் பேராசிரியர் ச.தேவதாசன், சித்த மருத்துவ பீட பதில் பீடாதிபதி பேராசிரியர் சோ.சுதர்சன் மற்றும் துறைத்தலைவர்கள், விரிவுரையாளர்கள் உள்ளிட்ட பல உயரதிகாரிகள் கலந்துகொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.

கிழக்கு பல்கலைக்கழக திருகோணமலை வளாக சித்த மருத்துவ அலகு, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் உயர்கல்வி அமைச்சு ஆகியவற்றின் அங்கிகாரத்துடன் 2008 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு, இவ்வலகினூடாக சித்த மருத்துவ கற்கைநெறி, பாரம்பரிய மருத்துவ நெறிகளை தற்போதைய நவீன சவால்களுக்கெற்ப ஆராய்ச்சியுடன் கூடியதாக கற்பிக்கப்பட்டு வருகின்றன.

# “இனமுறுகலை தடுக்கவே விகாரையை நிறுத்தினேன்”

திருகோணமலை, நிலாவெளி, இலுப்பை குளம் பகுதியில் நிர்மாணிக்கப்படவிருக்கும் பௌத்த விகாரையின் நிர்மாணப்பணிகளை நிறுத்துமாறு கோரி, பொதுமக்கள் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை முன்னெடுத்து வந்ததோடு, இதனால் இனமுறுகல்கள் ஏற்படும் என கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டைமானுடைய கவனத்திற்கு கொண்டு வந்ததையடுத்து, நிர்மாணிக்க இருக்கும் விகாரையின் பணிகள் நிறுத்தப்பட்டன.


இது தொடர்பாக பல அரசியல்வாதிகள் ஆளுநருக்கு அழுத்தம் கொடுத்த போதிலும் ஆளுநருடைய முடிவில் அவர் உறுதியாக இருந்தார்.

விகாராதிபதி மைத்திரி



மூர்த்தி மஹாநாயக்க தேரர் மற்றும் விகாராதிபதி ராக்ஷபதி அகுங்கல்லே விமல தம்ம திஸ்ச மஹாநாயக்க மஸ்த்ரவில அமரபுர மூலவன்ச பார்சவய தேரருக்கும் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் விளக்கம் அளித்தார்.

நிலாவெளி, இலுப்பை குளம் பகுதி மக்களின் ஆதரவுடன் விகாரை அமைக்கப்படாமல், எதிர்ப்புக்கு மத்தியில் விகாரை



அமைக்கப்படும் பொழுது அங்கு இனங்களுக்கிடையிலான முறுகல் நிலையை ஏற்படுகின்றது. எனவே ஆளுநர் என்ற வகையில் இனமுறுகல் ஏற்படுவதை தவிர்க்கும் முகமாக தன்னுடைய கடமையை செய்துள்ளதாக ஆளுநர் விளக்கம் அளித்தார்.

ஆளுநர் என்ற வகையில் கிழக்கு மாகாணத்தில் உள்ள அனைத்து இனங்களின் உரிமைகளை சமமாக பாதுகாக்க வேண்டியது எனது கடமை எனவும் தெரிவித்தார்.

# மாணவியை அழைத்த ஆசிரியருக்கு விளக்கமறியல்

■ எஸ். சதீஸ்

தன்னுடைய விடுதிக்கு மாணவியை அழைத்து அந்த மாணவியை பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்துவதற்கு முயன்றார் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட ஆசிரியர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

பொகவந்தலாவை பிரதேசத்தில் உள்ள பாடசாலையில் கற்பிக்கும் ஆசிரியரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

அவரை 22ஆம் திகதி வரையிலும் விளக்கமறியலில் வைக்குமாறு ஹட்டன் நீதவான் நீதிமன்ற நீதவான் புதன்கிழமை (16) உத்தரவிட்டுள்ளார்.

பாடசாலை முடிந்தவுடன் தன்னுடைய விடுதிக்கு வருமாறு செவ்வாய்க்கிழமை (15) மாணவியை அழைத்துள்ளார். அவ்வாறே மாணவியும் சென்றுள்ளார். அதன்போதே, ஆசிரியர் அம்மாணவியை பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்த முயன்றுள்ளார்.

**விற்பனைக்கு**

கிரிபத்கொட நகரத்தில் கண்டி வீதிக்கு 600 மீற்றர் தூரத்தில் உள்ள நவீனரக இரண்டுமாடிகளைக் கொண்ட வீடு விற்பனைக்கு உண்டு. 10.25 பேர்ச். 58 மில்லியன் 0754083227

# இந்திய உளவுத்துறையின் எச்சரிக்கையும் சீண்டிப் பார்த்தலும்

இறுதியாக நடைபெற்ற ஜனாதிபதி தேர்லுக்கு முன்னர், முஸ்லிம்களுக்கு எதிரான பிரசாரம், நாக்கூசும் அளவுக்கு முன்னெடுக்கப்பட்டமை யாவரும் அறிந்த விடயம். அதற்குப் பின்னர், ஒவ்வொரு செயற்பாடும் பொய்ப்பிக்கப்பட்டன.

“சிங்கள மக்களுக்கு மலட்டுத் தன்மையை ஏற்படுத்தும் துகள், கொத்துரொட்டியில் கலக்கப்பட்டுள்ளது ஆகையால், முஸ்லிம்களின் உணவகங்களின் சாப்பிடக்கூடாது” என்று பிரசாரங்கள் முன்னெடுக்கப்பட்டன.

இறுதியில், முஸ்லிம் வைத்தியர் ஒருவர், எவ்விதமான அனுமதியும் இன்றி, சிங்கள இளம் தாய்மார்களுக்கு கருத்தடைச் செய்துவிட்டார் என்றும் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டன. எனினும், அதில் இரண்டொரு தாய்மார்கள் மீண்டும் கருத்தரித்தனர். அந்த வைத்தியருக்கு எதிரான குற்றச்சாட்டுகள் பொய்யாகின.

இவ்விரண்டு சம்பவங்களுக்கு இடையில், முஸ்லிம் இளைஞர்கள் வேண்டுமென்றே கைது செய்யப்பட்டமை, பர்தா பிரச்சினை இவ்வாறு அடுக்கிக்கொண்டே போகலாம்.

இவ்வாறான பொய்ப் பிரசாரங்களால், பெருபாலான சிங்கள மக்கள், முஸ்லிம்களை சந்தேகக் கண்கொண்டே பார்த்தனர். இவையெல்லாம் அரசியலுக்காக ஜோடிக்கப்பட்டமை என்பது பின் நாளிலேயே வெளிச்சத்துக்கு வந்தன.

இதனிடையே, வடக்கு, கிழக்கில் தமிழர்களின் பூர்வீக காணிகளில் அடாத்தாக புத்தர் சிலைகளை வைத்தல், விஹாரைகளை நிறுவுதல் என்பன அரங்கேற்றப்பட்டுக் கொண்டிருக்கின்றன. ‘தட்டிக்கேட்டால் தாக்குவோம்’ என்ற சிந்தனையைத் துளிர்விடச் செய்துள்ளனர்.

எங்கிருந்தாவது ஆரம்பிக்கவேண்டும் என்ற சின்னத்தனமான சிந்தனையில் செயற்படுவோரே, இனவாதத்தை கக்கி, இரத்தத்தை சூடேற்றும் பணியை கனக்கச்சிதமாக செய்து கொண்டிருக்கின்றனர். இவற்றின் ஊடாக, நாட்டில் ஏற்படும் இரத்தக்களரியில் குதிப்பதற்கே முயல்கின்றனர்.

இதனிடையே, இலங்கையில் மீண்டும் இனக்கலவர சூழல் ஏற்பட்டுள்ளது என இந்திய உளவுத்துறை எச்சரிக்கை விடுத்துள்ளது. அதைச் சாதாரணமாக பார்த்துவிடமுடியாது. ஏனெனில், உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலுக்கு முன்னர், இந்தியாவின் உளவுத்துறை எச்சரிக்கை விடுத்திருந்தமை அறிந்ததே!

‘இலங்கை அரசின் தொல்பொருள் திணைக்களத்தின் ஆதரவுடன், தமிழர் பகுதிகளை ஆக்கிரமித்து, விஹாரைகள் அமைக்கப்பட்டு வருகின்றன. இது தமிழர்களுக்கு கோபத்தை ஏற்படுத்தி உள்ளன’ என்றும் இந்தியச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையைப் பொறுத்தவரையில், எங்கிருந்தாவது இனமோதலை ஏற்படுத்தவேண்டும் என்ற நோக்கத்திலான சீண்டிப்பார்த்தல் கைங்கரியங்கள் இடம்பெறுகின்றன. தற்போது இந்தச் சீண்டிப்பார்த்தல்கள் கனன்றுகொண்டிருக்கின்றன. எப்போது தீப்பிளம்பாய் கக்கும் என்பது யாருக்கும் தெரியாமலே இருக்கின்றது.

யுத்த களரிக்கும் பின்னர், கொவிட் - 19 பெருந்தொற்றுக்குள் சிக்கியிருந்த நாடு, மீண்டெழுந்து கொண்டிருந்த போது, பொருளாதார நெருக்கடி அப்படியே அமிழ்த்திவிட்டது. இதற்கிடையே மீண்டுமொரு இனமோதல் என்ற நெருக்கடியைத் தாங்கிக்கொள்ளும் அளவுக்கு நாடு இல்லை.

அவ்வாறானதொரு நிலைமை ஏற்படுமாயின், சுற்றுலாத்துறை உள்ளிட்ட சகல துறைகளும் கடுமையான பாதிப்பை சந்திக்கவேண்டிவரும். ஆகையால், இந்திய உளவுத்துறையின் எச்சரிக்கையை ஆழமாகக் கவனித்து, சீண்டிப்பார்க்கும் எண்ணத்தை கைவிடுவதே நாட்டுக்கும் எதிர்காலத்துக்கும் சிறந்தது.

தமிழ்Mirror www.tamilmirror.lk க்கு எழுதுங்கள்




தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk






## வாழ்வியல் தரிசனம்

உங்கள் நெஞ்சத்தை நீங்களே உடைத்து, உங்களை குற்றவாளி ஆக்கவேண்டாம். தேவையற்று எதற்கும் சலனப்பட்டு, கலங்குவது நிறுத்தப்பட வேண்டும். துணிச்சல் இன்றேல் வாழ்வில் இனிமை துலங்காது. பிறர் கூறும் கடுஞ்சொற்களைக் காதுகொடுத்துக் கேட்டலாகாது. இத்தகையவர்கள் வேண்டுமென்றே மனதைக் கலைத்துவிடும் செய்திகளைச் சொல்வதுண்டு.

மேலும் குடும்பத்தில் கோபத்தைக் காட்டலாகாது. நிதிப்பிரச்சினை, அலுவலகப் பிரச்சினை எனப் பலதரப்பட்ட அழுத்தங்களை அநேகர் அனுபவித்து வருவதுண்டு.

எந்தப் பாரிய பிரச்சினைகளையும் உடைக்க முடியும். திட்டமிட்டு கருமங்களை ஆற்றுக! உங்களுக்கு நீங்களே எஜமானன். மறக்க வேண்டாம்!

உங்களுக்கு எனப் பல கடமைகள் உண்டு. அவை பாரமானது என எண்ணினால், சின்ன விடயங்களும் பெரும் பாரமாகி விடும்.

எப்பொழுதும் மனதை இலேசாக்கி, அனைவரிடமும் சகஜமாகப் பழகினால், அழுத்தங்கள் குறைந்துவிடும். வாழ்க்கையை இரசித்தால் நிம்மதி நிச்சயம்.

பருத்தியூர் பாலா. வயிரவநாதன்

## கடிதங்கள்

### அரைகுறையில் பஸ் நிலையம்

முல்லைத்தீவு பஸ் நிலையத்துக்கு இரண்டாம் கட்ட நிதி கிடைக்காததன் காரணமாக, பஸ் நிலைய கட்டடம் தற்போதும் பயன்படுத்த முடியாத நிலையில் காணப்படுகின்றது.

கடந்த ஐந்து ஆண்டுகளுக்கு முன்னர், முல்லைத்தீவு பஸ் நிலையக் கட்டடம் அமைக்கப்பட்ட போதிலும், அதிகாரிகள் தமது பெயருக்காக திறப்பு விழாவைச் செய்திருந்தனர்.

பஸ் நிலையத்தில் வசதிகள் காணப்படாததன் காரணமாக, பஸ்கள் இக்கட்டடத்தைப் பயன்படுத்த முடியாத நிலையில், பஸ் நிலையக் கட்டடம் கால்நடைகள், பறவைகளின் உறைவிடமாக தற்போதும் காணப்படுகின்றது.

இது தொடர்பாக, மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் பல தடவைகள் ஆராயப்பட்ட போதிலும் ஒரு கட்டத்தில் இரண்டாம் கட்ட நிதி கிடைக்கும் என்ற நிலையில் வேலைகள் தொடங்கப்பட்ட வேளையில், இரண்டாம் கட்ட நிதி கிடைக்காததன் காரணமாக, முல்லைத்தீவு பஸ் நிலையம் தற்போது சேதமடைந்து வரும் நிலையில், ஒரு பயனற்ற கட்டடமாகவே காணப்படுகின்றது.

இலங்கையில் உள்ள 25 மாவட்டங்களில் போரால் பெரும் அழிவைக் கண்ட முல்லைத்தீவு நகரத்துக்கு ஒரு பஸ் நிலையம் முழுமையாக அமைக்கப்படாதது தொடர்பாக, பொது மக்களால் விசனம் தெரிவிக்கப்படுகின்றது.

நடராசா கிருஸ்ணகுமார்



கறுப்பு ஜூலையின் 40 ஆண்டுகளின் பின்னர் – 14:

# முதலாவது சட்டசபை: முதற்கோணலும் முழுக்கோணலும்



தெ. ஞாலசீர்த்தி மீநிலங்கோ

இலங்கையின் முதலாவது சட்டசபைக்கான தேர்தலை வடபகுதித் தமிழர்கள் புறக்கணித்தார்கள். இது யாழ்ப்பாண வாலிபர் காங்கிரஸின் எழுச்சியின் உச்சக்கட்டமான காலம். தேர்தலைப் புறக்கணித்ததன் மூலம், வலுவான செய்தியொன்றை வடபகுதி மக்கள் சொன்னார்கள். பிரித்தானிய கொலனி ஆதிக்கத்திலிருந்து முழுமையான சுதந்திரத்திரமே தாம் வேண்டுவது என்பதே அச்செய்தியாகும். அவ்வகையில், இலங்கையின் சுதந்திரத்துக்கான போராட்டத்தின் முக்கியமானதும் முதன்மையானதுமான பங்களிப்பாக இன்றுவரை இப்புறக்கணிப்பு கொள்ளப்படுகிறது.

யாழ்ப்பாணத்தில் வாலிபர் காங்கிரஸ், பொது மக்கள் மத்தியில் ஊக்கமாகச் செயற்பட்டு, டொனமூர் யாப்பை எதிர்த்து தேர்தலைப் புறக்கணித்ததைப் போல, தென்னிலங்கையால் செய்ய முடியவில்லை. தென்னிலங்கையில் ஆதிக்கத்தில் இருந்த இலங்கை தேசிய காங்கிரஸ், கொலனி ஆதிக்கத்தைப் பகைக்கவோ கேள்விக்குட்படுத்தவோ விரும்பவில்லை. டொனமூர் ஆணைக்குழுவின் பரிந்துரைகளை அவர்கள் நிராகரித்த போதும், சட்டசபைத் தேர்தல்களில் பங்கேற்றனர்.

இவ்விடத்தில் விதிவிலக்கான ஒரு நிகழ்வையும் சொல்லியாக வேண்டும். டொனமூர் ஆணைக்குழுவின் பரிந்துரைகள், இலங்கை தேசிய காங்கிரஸின் நிலைப்பாட்டுக்கும் கோரிக்கைகளுக்கும் முரணாக இருந்த போதும், அப்பரிந்துரைகளை ஏற்பது என்ற முடிவை ஏற்க மறுத்தவர்களும் இருந்தார்கள். இவர்களுள் முக்கியமானவர் ஈ.டபிள்யூ. பெரேரா. இலங்கை தேசிய காங்கிரஸின் முக்கிய தலைவர்களில் ஒருவரான இவர், டொனமூர் ஆணைக்குழுவினருடன் இலங்கை தேசிய காங்கிரஸ் சார்பாகக் கருத்துரைக்கச் சென்ற தூதுக் குழுவின் தலைவருமாவார்.

1915ஆம் ஆண்டு கலவரத்தை அடுத்து கைதுசெய்யப்பட்ட சிங்களத் தலைவர்களை விடுவிப்பதற்காக, பிரித்தானிய மகாராணியிடம் பொன்னம்பலம் இராமநாதனால் கையளிக்கப்பட்ட மனு, இவரது வீட்டிலேயே எழுதப்பட்டது என்பது மேலதிக செய்தி.

டொனமூர் பரிந்துரைகளோடு இணங்கிப் போவதென்ற தேசிய காங்கிரஸின் முடிவை வன்மையாக எதிர்த்த அவர், தேசிய காங்கிரஸில் இருந்த பிரிந்து, ‘அகில இலங்கை தராண்மை அமைப்பு’ என்ற கட்சியை உருவாக்கினார். அதில் இணைந்த இளம் அரசியல்வாதிகளில் எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்காவும் ஜீ.ஜீ. பொன்னம்பலமும் முக்கியமானவர்கள். ஆனால் காலப்போக்கில் இக்கட்சியும் மேட்டுக்குடிக் கட்சியாகச் சீரழிந்து, எல்லோரும் சட்டசபைத் தேர்தலில் போட்டியிட்டனர்.

டொனமூர் ஆணைக்குழுவின் பரிந்துரைகளின் விளைவாக, தமிழர் பிரதிநிதித்துவம் குறைந்து விடும் என்பதாலும் ஒரு தொகுதியினர் தேர்தல் புறக்கணிப்பை ஆதரித்தனர். யாழ்ப்பாணத்தின் மேட்டுக்குடி அரசியல்வாதிகளும் பழைமைவாதிகளும் குறுகிய தமிழ் இனவாதிகளும் டொனமூர் ஆணைக்குழுவின் பரிந்துரைகளை ஏற்பதா, எதிர்ப்பதா என்பதில் மேற்கொண்ட நிலைப்பாடு, இலங்கை தேசிய காங்கிரஸ் தலைமையின் நிலைப்பாட்டில் இருந்து அதிகம் வேறுபட்டதாக இருக்கவில்லை. வைத்திலிங்கம் துரைசாமி மட்டும் விதிவிலக்காகவிருந்தார்.

யாழ்ப்பாண மேட்டுக்குடியினர், இலங்கையினருக்கு அரச நிர்வாகத்தில் பொறுப்பதிகாரம் இல்லாவிட்டாலும், பிரதிநிதித்துவத்தின் மூலம் கிட்டக் கூடிய சலுகைகளையும் தனிப்பட்ட செல்வாக்கையும் கொலனிய அதிகாரத்திடமிருந்து தமக்குக் கிட்டக்கூடிய சிறு சிறு அதிகாரங்களையும் இழக்க விரும்பவில்லை.

1933இல் யாழ்ப்பாணத்தில் ஒரு கூட்டம் கூட்டப்பட்டது. அதில் தமிழ் மேட்டுக்குடிகளின் செல்வாக்கு அதிகமாக இருந்தது. இதனால் தேர்தல்களைப் புறக்கணிப்பது என்ற முடிவு கைவிடப்பட்டு, பிரதிநிதிகள் அற்று இருந்த யாழ்ப்பாணத்தின் நான்கு தொகுதிகளுக்கும் தேர்தல் அறிவிக்கப்பட்டது. தமிழ்த் தேசிய அரசியல் தலைமைகள், தமிழ் மக்களுக்கு இழைந்த கேவலமான அநீதிகளில் இதுவும் ஒன்று. ஒரு சிலரின் பதவி ஆசைகளுக்காக, ஒட்டுமொத்த தமிழ் மக்களின் விருப்பும் முடிவும் காவுகொள்ளப்பட்டது. இதில் முதன்மையான பங்கு ஜி.ஜி பொன்னம்பலத்தினுடையது.

1934 ஜூலையில் நடைபெற்ற தேர்தலில் ஜி.ஜி. பொன்னம்பலம், இராமநாதனின் மருமகன் சுப்பையா நடேசன், அருணாசலத்தின் மகன் அருணாசலம் மகாதேவா, நெவின்ஸ் செல்லதுரை ஆகியோர் தெரிவாகினர். இதுவே யாழ்ப்பாண வாலிபர் காங்கரஸின் முடிவுக்கு வழியமைத்தது.

இங்கு ஒரு விடயத்தை நினைவுபடுத்துவது தகும். 1921இல் அருணாசலத்தை வஞ்சித்து, சிங்கள மேட்டுக்குடி தலைவர்கள் இலங்கை தேசிய காங்கிரஸை ஒரு நாடளாவிய அமைப்பாகவும் இன வேறுபாடுகள் கடந்ததும் சமூக நீதிக்காக குரல் கொடுக்கக்கூடியதுமான ஓர் அரசியல் கட்சியாகவும் விருத்தி பெறாமல் தடுத்தனர். அதன் மூலம் பேரினவாதத்தையும் குறுகிய தேசிய வாதத்தையும் மேட்டுக்குடி அரசியலில் நுழைய விட்டனர். பத்தாண்டுகள் பின்பு இதே சிங்கள மேட்டுக்குடி அரசியல், முற்போக்கான ஒரு நாடளாவிய தேசிய இயக்கத்துக்கான வாய்ப்பை மறுத்தனர்.

டோனமூர் ஆணைக்குழுவின் பரிந்துரைகளின் விளைவால் உருவான முதலாவது சட்டசபையில், தமிழரது பிரதிநிதித்துவம் மிகவுங் குறைவாக இருந்தது. இது சட்டவாக்கத்திலும் கொள்கையமைப்பிலும் தாக்கங்களை ஏற்படுத்தியிருந்தது. பிரித்தானிய கொலனி ஆதிக்கம், வடக்கில் மீளவும் தேர்தல் நடத்துவதற்கு அக்கறை காட்டவில்லை. தமிழ்த் தலைவர்கள் எனப்பட்டோர், கெஞ்சி மன்றாடியே சட்ட சபைப் பிரதிநிதித்துவத்தைப் பெற வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டனர்.

இந்த முதலாவது சட்டசபை எவ்வாறு இயங்கியது? எவ்வாறு அதன் அரசியலை அரங்கேற்றியது என்று நோக்கினால், இன்று நடைமுறையிலுள்ள இலங்கை பாராளுமன்ற அரசியலுக்கு முன்னோடியாகவே, முதலாவது சட்டசபையின் நிகழ்வுகள் அரங்கேறின.

இந்தச் சட்ட சபைக்குள்ளே எதிர்கால இலங்கையின் தேசிய இன உறவுகளுக்குக் கேடாக அமையக் கூடிய பல்வேறு விடயங்களுக்குக் கட்டியங்கூறுகிற விதமான நிகழ்வுகள் நடந்தேறின.

சிங்களப் பேரினவாத அரசியல் தன்னை மேலும் இறுக்கமாக்கிக் கொள்வதற்கான அறிகுறிகள், இலங்கை தேசிய காங்கிரஸில் தெரிய வந்தாலும், அதை வெளிவெளியாக அடையாளப் படுத்துகிறதற்கான சூழ்நிலையைச் சட்ட சபைத் தேர்தல் முறை உருவாக்கியது. சர்வசன வாக்குரிமையும் அறிமுகப்படுத்தப்பட்ட தேர்தல் முறையும் இலங்கையின் சீரழிந்த தேர்தல் ஜனநாயகத்துக்கான பாதையை உருவாக்கின.

1930களில் இரண்டு விடயங்கள் நடந்தன. முதலாவது, சிங்கள-தமிழ் மேட்டுக் குடிகளுக்கு இடையேயான போட்டி உருவாகி விட்டது. இது, அதிகார நலன் சார்ந்ததாக இருந்த போதும், இனத்துவ அடையாளத்தைப் பெற்றது. இரண்டாவது, சர்வசன வாக்குரிமையின் அடிப்படையிலான பொதுத் தேர்தல்களில் வாக்காளர்களைத் தமக்குச் சார்பாக அணி திரட்டுவதற்குத் தேசிய இனங்கள் அனைத்தினதும் பொதுவான நலனை வற்புறுத்துவதை விட இன, மத, சாதி அடையாளங்களை இடத்துக்கு ஏற்றபடி வற்புறுத்துவது வசதியாய் இருந்தது. இதனால் பிரதேச சாதிய அடையாளங்களின் அடிப்படையில், பிரதிநிதித்துவங்கள் முனைப்படையத் தொடங்கின. இதனால் சாதிய ரீதியான முரண்பாடுகள், மதரீதியான முரண்பாடுகள் முன்னிலைக்கு வந்தன.

இந்த முரண்பாடுகள், தமிழ்ச் சமூகத்தையும் பீடித்தன. தமிழரிடையே சைவ வேளாள ஆதிக்கமே ஓங்கியிருந்ததால் கிறிஸ்தவ மேட்டுக் குடியினரது அரசியல் முக்கியத்துவம் குறைவாகவே இருந்தது. முற்போக்குச் சிந்தனையுள்ள கிறிஸ்தவர்கள், யாழ்ப்பாண வாலிபர் காங்கிரஸ் மும்முரமாக இயங்கிய போது ஆற்றிய பங்கை, அவர்களால் சட்ட சபைக்குள் ஆற்ற இயலவில்லை.

இங்கு நினைவில் கொள்ள வேண்டிய விடயமொன்றுண்டு. தமிழ் மக்கள் எடுத்த முடிவை மதித்து, அதன் அடிப்படையில் ஒரு வெகுசன இயக்கத்தைச் சட்ட சபையின் அரசியல் வரம்புகளுக்கு வெளியே முன்னெடுக்கத் தக்க ஒரு மனநிலை, அன்றைய தமிழ்த் தலைமையில் முக்கியமானவர்களிடம் இருக்கவில்லை. மாறாக, வாலிபர் காங்கிரஸ் எடுத்த தீர்மானம் தவறானது என்று வற்புறுத்திய மேட்டுக்குடிகள், அந்த முடிவை நிராகரித்தனர். இதன் பாதகமான விளைவுகளை இன்றுவரை தமிழர்கள் அனுபவிக்கின்றார்கள்.

இரண்டாம் உலகப் போரின் காரணமாக, தேர்தல் நடத்த இயலாததால் 1936ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட இரண்டாவது சட்ட சபை 1947ஆம் ஆண்டு வரை நீடித்தது. 1934இல் சட்ட சபைக்குத் தெரிவானது முதல், தமிழ்த் தேசிய இனத்தின் தலைவராகத் தன்னை அடையாளப்படுத்தி வந்த ஜி.ஜி. பொன்னம்பலமும் சிங்கள மகாஜன சபையின் வாரிசாக சிங்கள மகா சபையை உருவாக்கிய பண்டாரநாயக்கவும் இலங்கையின் இனமுரண்பாட்டு அரசியலின் தனகர்தாக்களாகினர்.

இப்பின்புலத்தில், 1936ஆம் ஆண்டு டி.எஸ். சேனநாயக்க தலைமையில் உருவாக்கப்பட்டதான சிங்களவர்களை மட்டுமே கொண்ட அமைச்சர் குழு கவனத்திற்குரியது. பின்னைய காலப் பேரினவாத அரசியல் போக்குக்கு ஒரு முன்னெச்சரிக்கையாகவோ வெள்ளோட்டமாகவோ இதைக் கொள்ளலாம். இக்காலப்பகுதியில் பொன்னம்பலம் இராமநாதனின் அரசியல் அஸ்தமனமும் சிங்களப் பேரினவாதப் போக்குகளும் தமிழ்த் தேசியவாதத்தின் நிறுவனமயமாதலை வேண்டிநின்றன. இரண்டாம் உலகப்போரின் பொருளாதாரக் காயங்கள் இலங்கையை தாக்கத் தொடங்கின. இவை புதிய அரசியல் போக்குகளுக்கும் இனத்துவ முரண்பாடுகள் கூர்மையடையவும் வழி செய்தன.

பால்நிலைசார் மீள்வருவார்ப்புகளை கட்டமைப்பதில்

# இலக்கியங்களின் பங்களிப்பு



அ.கிரிஜா,
யாழ்ப்பாண பல்கலைக்கழகம்

குலம் குலமாக வருகின்ற பெருமையும், ஆழ்ந்த அறிவு மேம்பாடும் ஆடவருக்குரிய பண்பாகும் என்பது இன்று நேற்று எழுந்த கருத்தொன்றல்ல. மாறாக சங்கம் அமைத்து தமிழ் வளர்த்த காலம் முதற்கொண்டு இன்றைய நவீன தொழிநுட்ப உலகிலும் ஆணாதிக்கமும், பெண்ணியமும் பேசும் வர்க்கத்தினர் கண்மூடித்தனமாக வாதிட்டு வருகின்ற கருத்தியல்களில் இவ்வாறான கருத்தியல்களும் ஒன்றாக கருதப்படுகின்றன. இவ்வகை சார்ந்த கருத்தியல்களை மீள்வருவார்ப்புக்கள் / மாதிரிஉருவார்ப்புக்கள் (stereotypes) என்பர்.

மீள்வருவார்ப்புக்கள் என்பன 'தனிநபர் பற்றியோ அல்லது யாதேனுமொரு குறித்த குழுவினர் பற்றியோ பொதுமைப்படுத்தப்பட்ட நம்பிக்கைகளின் வெளிப்பாடாகும்'. அதாவது சில முன் அனுமானங்களின் அடிப்படையில் தனிநபர்களையோ அல்லது குறிப்பிட்ட குழுவினரையோ இவர்கள் இப்படிப்பட்டவர்கள் தான் என நியாயமற்ற முறையில் நம்புதலை குறிக்கும். இவை மிகவும் தரப்படுத்தப்பட்டதும், எளிமைப்படுத்தப்பட்டதுமாக இருப்பதினால் இவற்றை நம்புதலென்பது மிகவும் இலகுவானதாகஅமைகிறது.

Stereotypes என்றபதம் ' Stereos' 'Typoos' எனும் கிரேக்க பதங்களின் சேர்க்கையால் தோற்றம் பெற்றதாகும். கிரேக்கத்தில் Stereos என்பது உறுதியான அல்லது திடமான (Firm solid) எனும் அர்த்தத்தினையும் Typoos என்பது அபிப்பிராயங்கள்/ தோற்ற வெளிப்பாடுகள் (Impression) எனும் அர்த்தத்தினையும் பிரதிபலிப்பதாக அமைகிறது. இதனால் இவ்விரு வார்த்தைகளின் சேர்க்கையாய் அமைந்த Stereotypes எனும் பதமானது திடமான அல்லது கட்டமைக்கப்பட்ட அபிப்பிராயங்களின் தொகுதி எனும் அர்த்தத்தினை வெளிப்படுத்துவதாக அமைகிறது.

இவ்வாறான மீள்வருவார்ப்பு கருத்தியல்கள் மக்கள் மத்தியில் நிலைபெறுவதற்கும், சந்ததி சந்ததியாக கடத்தப்பட்டுவருவதற்கும் பின்வரும் காரணிகளே பிரதானமானவையாக கருதப்படுகின்றன.

- பெரியவர்களிடமிருந்து பரம்பரை பரம்பரையாக கடத்தப்பட்டு வருகின்ற நம்பிக்கைகளும் மூட நம்பிக்கைகளும் சார்ந்த கொள்கைகள்.
- மொழி சார்ந்த படைப்புகளினதும், இலக்கியங்களினதும் தாக்கம்.
- ஊடகங்கள், குறிப்பாக காட்சி வழி ஊடகங்களால் கட்டமைக்கப்பட்ட விம்பங்கள்
- விளம்பரங்களின் செல்வாக்கு.

போன்றவற்றினூடாகவே இவ் வகையான கருத்தியல்கள் கட்டமைக்கப்பட்டு கடத்தப்பட்டு வருகின்றன.

உளவியல் கருத்துகளின்படி, மக்கள் மத்தியில் இன்னமும் மீள்வருவார்ப்புகள் நிலைத்து நிற்பதற்கான காரணமாக, மனித மனமானது ஏற்கெனவே பழக்கப்பட்ட ஒன்றினையோ அல்லது ஒரு சம்பவத்தையோ மீண்டும் மீண்டும் சந்திக்கும் போது, விரைவாகத் தானியங்கியாகவே முன்னைய நினைவுகளை மீட்டிக்கொள்வதனால் (Mental shortcuts) அவர்கள் மனதில் பதியப்பட்ட கருத்தியல்களிலிருந்து விடுபடுவதற்கு முடியாமல் இன்னமும் சமூகத்தில் மீள்வருவார்ப்புகள் நிலைபெற்றுத் தொடர்வதாக குறிப்பிடுகின்றன.

இவ்வாறாக, உலகளாவிய தளத்தில் பல்வேறு வகையான மீள்வருவார்ப்புகள் மக்கள் மத்தியில் செல்வாக்கு செலுத்திவருவதன் விளைவாக, இலங்கையிலும் அவற்றின் தாக்கம் சமூக, பண்பாட்டு, அரசியல், பொருளாதார துறைகளிலும் வியாபித்துக் காணப்படுகின்றன. இதனடிப்படையில் இலங்கையில் நிலவி வருகின்ற மீள்வருவார்ப்புகளை பின்வருமாறு அடையாளப்படுத்தலாம்.

### சமூக, பண்பாட்டு தளம்:

நவீன தொழில்நுட்பம் வளர்ச்சியடைந்திருந்தாலும் இலங்கையை பொறுத்தவரையில் இன்னமும் பாரம்பரிய நம்பிக்கைகளுக்கும் , பண்பாட்டுப் பெறுதிகளுக்கும் அதிகம் முக்கியத்துவம் வழங்கப்பட்டு வருவதை, மக்களது வாழ்வியல் அம்சங்களினூடாக தெள்ளத் தெளிவாக அறிந்து கொள்ளமுடிகிறது. அந்தவகையில் பாரம்பரியத்திலும் பண்பாட்டிலும் வேரூன்றி வளர்ந்த சமூகத்தினரிடையே காலம் காலமாக பல்வேறு மீள்வருவார்ப்புகள் விதைக்கப்பட்டுள்ளன.

பால்நிலை சார்ந்து நோக்கும் போது, ஒரு குழந்தையின் பிறப்பு முதல் இறப்பு வரையில் குறித்த மீள்வருவார்ப்புகளின் ஆதிக்கம் காணப்படுவதை அவதானிக்கலாம். ஆண்களை உயர்வாகவும், பெண்களை ஒப்பீட்டளவில் தாழ்த்தியுமே காலம் காலமாக வளர்ச்சியடைந்த சமூக வகுப்பினர், ஆண் குழந்தைக்கென நீல வர்ணத்தையும், பெண் குழந்தைக்கென இளஞ்சிவப்பு வர்ணத்தையும் பயன்படுத்துவதைக் காணலாம். நீலவர்ணமானது நிலைத்தன்மை, நிபுணத்துவம், ஞானம் போன்ற குணங்களையும், இளஞ்சிவப்பு வர்ணமானது மென்மையையும் அடையாளப்படுத்துவதால் பால்நிலை சார்ந்து பெண்களுக்கும் ஆண்களுக்குமென தனித்துவமான குணாதிசயங்களை அடையாளப்படுத்துவதற்காக பிறப்பு முதற்கொண்டு இவ்வகையான கருத்தியல்கள் பின்பற்றப்படுகின்றன.

அத்துடன், ஆண் பிள்ளைகளுக்கான விளையாட்டுப் பொருட்களாக கார், டிப்பர், தொழில் உபகரணங்கள் போன்ற வன்மையான பொருட்களையும் பெண் பிள்ளைகளுக்கென பொம்மைகள், சமையல் பாத்திரங்கள் போன்றவற்றையும் கொள்வனவு செய்கின்றனர்.

இவ்வாறான பால்நிலை சார்ந்த மீள்வருவார்ப்புகளை மக்கள் மத்தியில் குறிப்பாக தமிழரிடையே விதைத்ததில் தமிழ் இலக்கியங்களுக்கு அதிக பங்குண்டு.

உதாரணமாக-

- 'உயிரினும் சிறந்தன்றநாணேநாணினும் செயிர்தீர் காட்சிக் கற்புச் சிறந்தன்று' (தொல், களவியல் - 23)
- 'அச்சமும் நாணும் மடனுமுந் துறதல் நிச்சமும் பெண்பாற்குஉரியஎன்ப' (தொல், களவியல்- 8)

ஆண்களுக்குப் பெருமையும் வீரமும் வேண்டப்படுவன போல பெண்களுக்கு அச்சமும் நாணமும் சிறந்தது என்று குறிப்பிடுகிறார்.

- பெண்டிரும் உண்டுகொல் பெண்டிரும் உண்டுகொல் கொண்டதொழுநன் உருகுறைதாங்குறுவும் பெண்டிரும் உண்டுகொல். (சிலப்பதிகாரம், ஊர் சூழ்வரி 51)

பெண் என்பவள் கணவனுக்காகவே வாழ வேண்டும்; தன்னைத் தயார்படுத்திக் கொள்ளவேண்டும். அவனது நடவடிக்கைகளை, ஒழுங்கீனங்களை எதிர்த்து அறிவுரை கூட கூறக்கூடாது. தாங்கிக் கொண்டு வாழ வேண்டும் என்பதையே போதிக்கின்றது.

- வினையே ஆடவர்க்கு உயிரே வானுதல் மனையுறை மகளிர்க்கு ஆடவர் உயிர் (குறுந்தொகை)

குடும்பத்தில் பெண்களின் உழைப்பு சுரண்டப்பட்டிருப்பதையும், ஆடவரை உயிராக கொண்டு வாழவேண்டும் என்று பெண்கள் கட்டாயப்படுத்தப்பட்டு இருப்பதையும் அறிவிக்கிறது.

- 'இல்லாள்கண் தாழ்ந்த இயல்பின்மைஎஞ்ஞான்றும் நல்லாருள் நாணுத் தரும்' (திருக்குறள்)

மனைவியிடத்தில் தாழ்ந்து நடக்கும் இழிந்த தன்மை ஒருவனுக்கு எப்போதும் நல்லவரிடையே இருக்கும் போது நாணத்தைத் தரும்

- ஆற்றையும் காற்றையும் நம்பலாம். கோபமடைந்த யானையை நம்பலாம். சேலை கட்டிய மாதரை நம்பினால் தெருவில் நின்று திண்டாடுவீரே........ (இந்து சமய சான்றோர்)
- பழமொழிகள்:

பெண்

1. பெண்ணுக்கு பெண்மையே சீதணம்
2. பேசினால் வாயாடி; பேசாவிட்டால் ஊமைப்பெண்
3. கிணற்றிற்கு அழகு தண்ணீர்; பெண்ணுக்கு அழகு பொட்டு
4. ஆவதும் பெண்ணாலே அழிவதும் பெண்ணாலே
5. பெண்ணென்றால் பேயும் இரங்கும்
6. கற்பில்லா அழகு வாசனையில்லா மலர்
7. அரைக்காசை ஆயிரம் ஆக்குவதும் ஆயிரத்தை அரைக்காசாக்குவதும் பெண்சாதி
8. அவள் அழகிற்கு தாய்வீடு ஒரு கேடு
9. பணம் பார்த்து பண்டம் கொள் குணம் பார்த்து பெண் கொள்
10. ஆண் இல்லாப் பெண்ணுக்கு வாழ்வு இல்லை

ஆண்

1. ஆயிரம் பேரிடம் சினேகிதம் பண்ணினாலும் ஆம்பிளைக்கென்ன
2. உத்தியோகம் புருச இலட்சணம்
3. அச்சம் ஆண்மையைக் குறைக்கும்
4. ஆணை அடித்து வள பெண்ணை பொத்தி வள
5. ஆண் ஓர் ஆறு, பெண் ஓர் ஏரி
6. ஆண்பிள்ளைஅழுதால் போச்சு
7. ஆண் மூலம் அரசாளும் பெண்மூலம் நிர்மூலம்
8. ஆணாய்ப் பிறந்தால் அருமை, பெண்ணாய்ப் பிறந்தால் எருமை
9. ஆண்கள் இதயத்தால் சிரிப்பர் பெண்கள் உதடுகளால் சிரிப்பர்
10. ஆணுக்கு உலகமெல்லாம் வீடு, பெண்ணுக்கு வீடுதான் உலகம்

இவ்வாறாக காலம் காலமாக ஆண்களை உயர்த்தியும் பெண்களை தாழ்த்தியும் நோக்கும் தன்மை காணப்பட்டு வந்துள்ளது. இவற்றினை அடியொற்றியே ஊடகங்களும் பெண்களுக்கான பாத்திரக் கட்டமைப்பின் போது, பெண்களை எப்போதும் சமையலறையில் காட்டுதல், பெண்கள் எப்போதும் ஆண்களுக்கு பணிவிடை செய்தல், சிறிய பிரச்சினைகளிற்கும் கண்ணீர் வடிப்பவர்களாக பெண்களைக் காட்டுதல், வீட்டிற்குள்ளேமுடங்கியிருத்தல், பெண் பிள்ளைகளென்றால் அதிகம் பேசக்கூடாது; அதிலும் குறிப்பாக ஆடவரோடு பேசக்கூடாது என தனித்துவமானதொரு மீள்வருவார்ப்புகளை கட்டமைப்பு செய்துள்ளனர்.

உண்மையில் யாரோ ஒருவர் தனது சுய அனுபவத்தின் அடிப்படையில் கட்டமைத்து விட்டுச் சென்ற இக் கருத்தியல்கள், காலம் காலமாக அடையாளமாக சமூகத்தில் தொடர்வதை இவற்றினூடாக இனங்கண்டுகொள்ளலாம்.

இவ்வாறாக கட்டமைக்கப்படும் மீள்வருவார்ப்புகள் பெரும்பாலானோரால் உண்மையென ஏற்றுக்கொள்ளப்படுமளவிற்கு ஊடகங்களால் வலிமையான கருத்தியல்கள் பயிரிடப்படுகின்றன. மேலும் இவ்வகையில் அமையும் கருத்தியல்கள் நேர்மறையானதாகவும், எதிர்மறையானதாகவும் அமையக்கூடும் என குறிப்பிடப்பட்டாலும் பொதுவில் மீள்வருவார்ப்புகள் என்பன, எதிர்மறையான தாக்கங்களையே சமூகத்தில் ஏற்படுத்துகின்றன. இவை ஒருவரது சுயத்தையும் கௌரவத்தையும் கேள்விக்கு உட்படுத்துவதோடு அவர் பற்றிய தப்பபிப்பிராயத்தையும் ஏற்படுத்துகின்றன.

பாரம்பரிய மரபுகளில் போதிக்கப்படுகின்ற பெரியோரை மதித்தல், சமயங்கள் போதிக்கும் ஆன்மிக சிந்தனைகளை கடைப்பிடித்தல், வரவேற்றலும் உபசரித்தலும், அடுத்தவர் மீது பரிவுகொள்ளுதல் போன்ற நற்பண்புகள் (moralities) சமூகத்தினரால் பின்பற்றப்படுமாயின் ஊடக செல்வாக்கிற்கு அப்பாற்பட்டு மீள்வருவார்ப்புகளிலிருந்து விடுபட்டு, பன்மைத்துவ சமூகத்தினர் முரண்பாடற்ற சமூக உறவுநிலைகளை கட்டமைக்க முடியும் என்பதை பல்வேறு உலகநாடுகளும் வலியுறுத்துகின்றன.

# கண்ணிவெடி அகற்றும் பணிகளுக்கு ஜப்பான் மீண்டும் உதவி

இலங்கையின் வட மாகாணத்தில் மனிதநேய கண்ணிவெடி அகற்றும் பணிகளை முன்னெடுப்பதற்கு ஜப்பானிய அரசாங்கம் மொத்தமாக 547,443 அமெரிக்க டொலரை (சுமார் ரூ. 170 மில்லியன்) Skavita Humanitarian Assistance and Relief (SHARP) திட்டத்துக்கு வழங்கியிருந்தது.

இந்தத் தொகை வழங்குவதற்கான உடன்படிக்கை கைச்சாத்திடும் நிகழ்வு கிளிநொச்சி மாவட்டத்தின் SHARP கள அலுவலகத்தில் அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில், இலங்கைக்கான ஜப்பானிய தூதுவர் மிசுகொஷி ஹிதேகி, மற்றும் SHARP இன் பணிப்பாளர் / கள அறிக்கையிடல் அதிகாரி ஓய்வு பெற்ற மேஜர் ஜெனரல் சுமதி ரஞ்ஜன் பாலசூரிய ஆகியோர் உடன்படிக்கையில் கைச்சாத்திட்டனர்.

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு தொடர்ச்சியாக ஆதரவளிப்பதற்கான ஜப்பானின் அர்ப்பணிப்பை தூதுவர் மிசுகொஷி வெளிப்படுத்தியதுடன், அதனூடாக ஒருமைப்பாட்டை ஏற்படுத்தி, இலங்கையில் நிலைபேறான அபிவிருத்தியை ஊக்குவிக்க எதிர்பார்ப்பதாக தெரிவித்தார்.

இலங்கை கண்ணிவெடி அகற்றல் நிகழ்ச்சித்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது முதல், ஜப்பானிய அரசாங்கத்தால் தொடர்ச்சியாக அப்பணிகளுக்கு ஆதரவளிக்கப்பட்டுவருவதுடன், இதுவரை வழங்கப்பட்டுள்ள மொத்த உதவித் தொகை 43 மில்லியன் அமெரிக்க டொலருக்கு அதிகமானதாக அமைந்துள்ளது. இலங்கைக்கான ஜப்பானிய உத்தியோகபூர்வ அபிவிருத்தி உதவிக் கொள்கையின் பிரகாரம் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பிராந்தியங்களின் அபிவிருத்திக்கு ஆதரவளிப்பது முக்கியத்துவம் பெறுகின்றது.

இந்த நிதியாண்டின் செயற்றிட்டத்தினூடாக சுமார் 400க்கும் அதிகமான இடம்பெயர்ந்து வசிப்போரை தமது சொந்தப் பகுதிகளில் மீளக்குடியேற்றி, அவர்களின் வாழ்வாதாரங்களை மேம்படுத்தும் வகையில் ஊக்குவிப்புகளை வழங்க எதிர்பார்க்கப்படுகின்றது. கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் கண்ணிவெடி பாதிப்புகள் காணப்படும் பகுதிகளை விடுவித்து, சுமார் 2,300க்கும் அதிகமானவர்களுக்கு நேரடியாக அல்லது மறைமுகமாக உதவுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.




இந்த உதவித் தொகை ஒதுக்கீடு தொடர்பில் ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் சுமதி ரஞ்ஜன் பாலசூரிய குறிப்பிடுகையில்;

"2016ஆம் ஆண்டில் கண்ணிவெடி அகற்றும் பணிகளை முன்னெடுக்க SHARP ஆரம்பித்தது. முதல் தொடர்ச்சியாக ஆறு வருடங்களாக SHARP மீது நம்பிக்கை கொண்டு ஆதரவளிக்கின்றமைக்காக ஜப்பானிய தூதரகத்துக்கு SHARP நன்றி தெரிவிக்கின்றது. 2023 ஜுலை வரையில், ஜப்பானிய அரசாங்கத்திடமிருந்து கிடைத்திருந்த உதவிகளினூடாக SHARP இனால் மொத்தமாக 2,414,199 சதுரஅடிப் பகுதி விடுவிக்கப்பட்டுள்ளதுடன், மொத்தமாக 11,471 நபர்களை தாக்கும் கண்ணிவெடிகள், 168 தாங்கி தகர்ப்பு கண்ணிவெடிகள், 4,166 UXOகள் மற்றும் 19,647 க்கு அதிகமான SAA க்கள் போன்றன மீட்கப்பட்டுள்ளன. 2,596க்கு அதிகமான குடும்பங்களின் அல்லது 10,300 நபர்கள் நேரடியாக மற்றும் மறைமுகமாக அனுகூலம் பெற்றுள்ளனர். SHARP இனால் விடுவிக்கப்பட்டுள்ள மொத்தப் பகுதிகளில் 90 சதவீதத்துக்கும் அதிகமான பகுதியை இது கொண்டுள்ளது.

கண்ணியத்துடன், வினைத்திறனான வகையில் ஜப்பானிய தூதரகத்தின் முழு ஆதரவுடன் எமது செயற்பாடுகளை SHARP முன்னெடுக்கின்றது. வழங்கப்படும் நிதிக்கு முழுமையாக பொறுப்புக்கூறலை வெளிப்படுத்தி, எமது அனுசரணையாளர்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றும் வகையில் செயலாற்றுவோம்.

SHARP இன் அங்கத்தவர்களின் மனமார்ந்த நன்றியை தூதுவர் மிசுகொஷி ஹிதேகி, ஜப்பானிய தூதரகத்தின் GGP சகல ஊழியர்கள் மற்றும் ஜப்பானிய மக்களுக்கும் தெரிவித்துக் கொள்கின்றோம். முக்கியமாக, நாட்டில் முன்னெடுக்கப்படும் கண்ணிவெடி அகற்றும் பணிகளுக்கு தொடர்ச்சியாக ஆதரவளிக்கும் ஜப்பானிய தூதரகத்தின் செயற்பாடுகளுக்கும், நாட்டு மக்களின் நலனில் அக்கறை காண்பிக்கின்றமைக்காகவும் நன்றி தெரிவிக்கின்றோம்" என்றார்.

# புத்தாக்கத்துக்காக SLT-MOBITEL க்கு கௌரவிப்பு

SLT-MOBITEL, அண்மையில் தாய்லாந்தின் பாங்கொக் நகரில் நடைபெற்ற Digital Transformation World Asia 2023, TM Forum Catalyst விருதுகள் வழங்கும் நிகழ்வில் 'The Metaverse Experience: Re-inventing telco business - Phase II' செயற்திட்டத்துக்காக 'Best Innovation & Future Techco' விருதைப் பெற்றுக் கொண்டது.



தொலைத்தொடர்பாடல் துறை, தொழிற்றுறை நியமங்களுக்கான கொள்கை ஆதாரங்கள் மற்றும் நிலைபேறான இலக்குகளில் தாக்கம் ஆகியவற்றில் வெற்றிகரமான புத்தாக்கங்களை கௌரவிக்கும் வகையில் இந்த விருதுகள் வழங்கும் நிகழ்வு அமைந்திருப்பதுடன், Digital Transformation Asia 2023 என்பது வருடாந்தம் ஏற்பாடு செய்யப்படும் விருதுகள் வழங்கும் நிகழ்வாக அமைந்திருப்பதுடன், தொழிற்றுறையின் முன்னோடிகள், நிபுணர்கள் மற்றும் தொலைத் தொடர்பாடல் மற்றும் டிஜிட்டல் துறைகளைச் சேர்ந்த பங்காளர்களை ஒன்றிணைத்து, புதிய போக்குகள், புத்தாக்கங்கள் மற்றும் டிஜிட்டல் மாற்றியமைப்பு நடவடிக்கைகளில் சிறந்த செயன்முறைகள் பற்றி கலந்துரையாடுவதாக அமைந்துள்ளது.

இந்த மாநாட்டை, டிஜிட்டல் மாற்றியமைப்பு மற்றும் வியாபார புத்தாக்கம் தொடர்பில் அறிவை பகிர்ந்து கொள்வதற்கு அங்கத்தவர்களுக்கு வாய்ப்பளிக்கும் சர்வதேச தொழிற்றுறை சம்மேளனமான TM Forum ஏற்பாடு செய்கின்றது. இந்த ஆண்டின் Digital Transformation World Asia 2023 நிகழ்வு தாய்லாந்தின், பாங்கொக் நகரில் மார்ச் 14ஆம் திகதி முதல் 16 ஆம் திகதி வரை நடைபெற்றது.

மாநாட்டின் இறுதி நாளன்று, தொலைத்தொடர்பு துறையின் மாபெரும் சவால்களுக்கு புத்தாக்கமான தீர்வுகளை வடிவமைக்கும் அங்கத்தவர்களின் சாதனைகள் கௌரவிக்கப்பட்டன. கட்டமைக்கப்பட்ட, முறையான மற்றும் ஒன்றிணைந்த செயன்முறையினூடாக ஆய்வு மற்றும் அபிவிருத்தி பணிகளை துரிதப்படுத்தப்படுவதுடன், புதிய தொழில்நுட்பங்களின் பிரயோகம் மற்றும் வளர்ந்து வரும் நியமங்கள் போன்றவற்றை உறுதி செய்வதாகவும் செயற்றிட்டங்கள் அமைந்திருக்கும்.

TM Forum இன் DTW Asia 2023 இன் சுயாதீன நடுவர் குழாமால், நான்கு பிரிவுகளிலிருந்து வெற்றியாளர்கள் தெரிவு செய்யப்பட்டிருந்தனர். வியாபாரத் தாக்கம், நிலைபேறாண்மை, சமூகத்தில் தாக்கம், சிறந்த வெளிப்படுத்தல், சிறந்த புத்தாக்கம், எதிர்கால தொழில்நுட்பம் போன்றன அவற்றில் அடங்கியுள்ளன.

'Best Innovation & Future Techco' விருதினூடாக, தொழிற்றுறைக்கு டிஜிட்டல் மாற்றியமைப்பை பெற்றுக் கொடுக்கக்கூடிய புத்தாக்கமான மற்றும் எதிர்கால நோக்குடைய தொழில்நுட்ப தீர்வு கௌரவிக்கப்பட்டிருந்தது.

SLT-MOBITEL உடன், China Unicom, China Mobile, CAICT ஆகியன இந்த விருதுக்காக போட்டியிட்டிருந்ததுடன், AsiaInfo, Whale Cloud மற்றும் Shenzhen Tianyuan-DIC ஆகியனவும் பங்கேற்றிருந்தன.

விருதை வென்ற செயற்றிட்டமான 'The Metaverse Experience: Re-inventing telco business - Phase II' ஊடாக Metaverse இல் வாடிக்கையாளர் அனுபவத்தின் முன்னேற்றம் வெளிப்படுத்தப்பட்டிருந்தது. metaverse storefront மற்றும் metaverse conference hall இல் பிரத்தியேகமான மாற்றியமைப்பு வசதிகளை வழங்குவதாக இந்தத் தீர்வு அமைந்துள்ளது. metaverse இல் வாடிக்கையாளர்களுக்கு பெறுமதி வாய்ந்த கட்டமைப்புகளை பயன்படுத்துவதை கட்டியெழுப்பும் வகையிலும் இந்தத் திட்டம் அமைந்திருப்பதுடன், Communications Service Provider (CSP) இனால், ஏற்டகெனவே காணப்படும் தயாரிப்புகளையும் சேவைகளையும் விற்பனை செய்வது மட்டுமன்றி, சிறந்த அனுபவத்துடன், தொழிற்பாட்டு வினைத்திறனை மேம்படுத்தக்கூடியதாகவும் இருக்கும். இணையம் மாற்றியமைக்கப்படுவதுடன், டிஜிட்டல் முறையில் மேம்படுத்தப்பட்ட உலகையும், நிஜ அம்சங்களையும் வழங்கும் Metaverse என அறியப்படும் அம்சமாக மாறிய வண்ணமுள்ளது. எமது கற்பனைகளை வெளிப்படுத்தி, எமது வாழ்க்கையையும் வியாபாரங்களையும் மாற்றியமைக்கும் வகையில் Metaverse அமைந்துள்ளது.

இந்த விருதினூடாக, புதிய கொள்கைகள் மற்றும் புத்தாக்கங்களில் SLT-MOBITEL காண்பிக்கும் தொடர்ச்சியான அர்ப்பணிப்பு வெளிப்படுத்தப்படுவதுடன், அனைத்து இலங்கையர்களின் வாழ்க்கை முறையை மேம்படுத்துவதாக அமைந்திருக்கும். தொழிற்றுறை மற்றும் தேசத்தில் துரித டிஜிட்டல் மயமாக்கலை பின்பற்றுவதற்கு பெருமளவு பங்களிப்பு வழங்குவதாக இந்தக் கௌரவிப்பு அமைந்திருக்கும்.

திருவண்ணாமலை

# குழந்தை வரம் வேண்டி மண்சோறு சாப்பிட்டு பெண்கள் பிரார்த்தனை

திருவண்ணாமலை மாவட்டம், சேத்துப்பட்டு அடுத்த கோட்டுப்பாக்கம் கிராமத்தில், கடந்த, 200 ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த பரதேசி ஆறுமுக சுவாமிகள் என்பவரின் ஜீவசமாதி உள்ளது. அந்த ஜீவ சமாதியில் கோவில் கட்டி, கிராம மக்கள் வழிபட்டு வருகின்றனர். ஆடி அமாவாசையன்று சித்தருக்கு குருபூஜை செய்யப்படுவது வழக்கம்.

அதன்படி, இம்முறை ஆடி அமாவாசை தினத்தன்று குரு பூஜை விழா நடைபெற்றது. அதை முன்னிட்டு ஜீவ சமாதியில் சிறப்பு அபிஷேகம், பூஜைகள் நடத்தப்பட்டன. சுவாமிக்கு படையலிட்ட பிரசாதம், குழந்தை இல்லாத பெண்களுக்கு வழங்கப்பட்டது. அந்த



பிரசாதத்தைப் பெற்றுக் கொள்ளும் பெண்கள் குளக்கரையில் வைத்து மண் சோறு சாப்பிட்டு வழிபட்டால், குழந்தை வரம் கிடைக்கும் என்பது அப்பகுதி மக்களின் நம்பிக்கையாக இருந்து வருகிறது.

கோவிலில் வழங்கப்பட்ட பிரசாதத்தை பெண்கள் மடியில் ஏந்தி வாங்கி, கோவில் குளக்கரையில் வைத்து, மண்டியிட்டு மண் சோறு சாப்பிட்டு, குழந்தை வரம் வேண்டி வழிபட்டனர். குழந்தை இல்லாமல், இங்கு பிரார்த்தனை செய்து குழந்தை பெற்ற தம்பதியர்கள் ஏராளமானோர் வந்து நேர்த்திக்கடனை செலுத்தினர்.

பெங்களூர்





## தனியாக பிரிந்தது விக்ரம் லேண்டர்

சந்திரயான்-3 விண்கலத்தின் உந்துவிசைக் கலனில் இருந்து 'விக்ரம்' லேண்டர் பகுதியானது தனியாக பிரிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில், உந்துவிசைக் கலனும் லேண்டர் பகுதியும் தனியாகப் பிரிந்த நிலையில், இரண்டும் தனித்தனியாக தங்களது பயணத்தை மேற்கொள்ளும். இது குறித்து இஸ்ரோ வெளியிட்டுள்ள தகவலின்படி, ப்ராபல்ஷன் மாட்யூலில் (PM) இருந்து லேண்டர் பகுதி (LM) வெற்றிகரமாக பிரிக்கப்பட்டது என்றும், வியாழக்கிழமை (18) மாலை 4 மணிக்கு, திட்டமிடப்பட்ட டீபூஸ்டிங்கில் லேண்டர் பகுதி குறைந்த சுற்றுப்பாதையில் இறங்க உள்ளது என தெரிவித்துள்ளது.

ஓகஸ்ட் 23ஆம் திகதி மாலை 5.47 மணிக்கு 'விக்ரம்' லேண்டரானது, சுற்றுப்பாதையில் இருந்து நிலவின் தென் துருவப் பகுதியில் மெதுவாகத் தரையிறங்கும் பணியை மேற்கொள்ளும் என எதிர்பார்க்கப்படுகிறது.

புதுடெல்லி

## நேரு அருங்காட்சியகத்தின் பெயர் மாற்றம்



புதுடெல்லியில் உள்ள நேரு நினைவு அருங்காட்சியகம் அதிகாரபூர்வமாக பிரதமரின் அருங்காட்சியகம் என மறுபெயரிடப்பட்டது.

புதுடெல்லியின் தீன் மூர்த்தி வளாகத்தில் உள்ள நேரு நினைவு அருங்காட்சியகம் மற்றும் நூலகம் (NMML) தற்போது அதிகாரபூர்வமாக பிரதம மந்திரி அருங்காட்சியகம் மற்றும் நூலகச் சங்கம் எனப் பெயர் மாற்றம்



செய்யப்பட்டு ஓகஸ்ட் 14ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வந்துள்ளதாக நேரு நினைவு அருங்காட்சியகம் மற்றும் நூலகத்தின் நிர்வாகக் குழுவின் தலைவர் தெரிவித்துள்ளார்.

ஆந்திரா

## திருமண ஆசை காட்டி நண்பனை பெண்ணாக மாற்றிய வாலிபர்

ஆந்திர மாநிலம் கிருஷ்ண லங்கா பகுதியை சேர்ந்தவர் நாகேஸ்வரராவ். இவருக்கு அதே பகுதியை சேர்ந்த மற்றொரு வாலிபருடன் பழக்கம் ஏற்பட்டு. இருவரும் நெருங்கிய நண்பர்களாக மாறினர். இந்த நெருக்கம் இருவரிடையே தன்பாலின ஈர்ப்பை ஏற்படுத்தியுள்ளது. இருவரும் வெவ்வேறு பெண்களை திருமணம் செய்து கொண்டால் தனித்தனியாக பிரிந்து விடுவோம் என எண்ணி "நாம் இருவரும் திருமணம் செய்து கொண்டு ஒன்றாக இருக்கலாம்" என நாகேஸ்வரராவ் ஆசை வார்த்தை கூறியுள்ளார். அதன்படி நண்பர்களில் யாராவது ஒருவர் பெண்ணாக மாற வேண்டும் என்ற போது நாகேஸ்வர ராவின் நண்பர் பெண்ணாக மாற ஒப்புக்கொண்டுள்ளார்.

இதனையடுத்து நாகேஸ்வரராவின் நண்பர் அறுவை சிகிச்சை மூலம் தன்னை பெண்ணாக மாற்றிக் கொண்ட பின்னர் நாகேஸ்வரராவிடம் இருவரும் திருமணம் செய்து கொள்ள கேட்டபோது நாகேஸ்வர ராவ், "நீ அழகாக இல்லை; அதனால் உன்னை திருமணம் செய்ய முடியாது" என மறுப்பு தெரிவித்துள்ளார். இதனைக் கேட்டு அதிர்ச்சி அடைந்த நாகேஸ்வரராவின் நண்பர் பெண்ணாக மாறினால் திருமணம் செய்வதாக கூறி ஏமாற்றி விட்டதாக கிருஷ்ண லங்கா பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார். இதனையடுத்து பொலிஸார் வழக்கு பதிவு செய்து நாகேஸ்வரராவை கைது செய்துள்ளனர்.

நியூயோர்க்

## 'டிக்டாக்' செயலியை பயன்படுத்த தடை

சிறந்த பொழுதுபோக்கு செயலியாக டிக்டாக் இருந்து வருகிறது. பயனர்கள் தங்களுடைய தனித்திறமையை வெளிப்படுத்த இதை ஒரு சிறந்த தளமாக பயன்படுத்தி வருகின்றனர். உலகளவில் கோடிக்கணக்கான பயனர்கள் இந்தச் செயலியை பயன்படுத்தி வருகின்றனர்.

இந்தச் செயலியின் நிறுவனம் சீனாவை சேர்ந்தது. டிக்டாக் செயலி மூலம் தரவுகளை திருடுவதாகவும், தங்கள் நாட்டின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் இருப்பதாகவும் சீன அரசு மீது பல்வேறு நாடுகள் குற்றம்சாட்டின. ஆனால், 'டிக்டாக்' செயலி நிறுவனம் மற்றும் சீன அரசு இந்தக் குற்றச்சாட்டை மறுத்து வந்தன. என்றாலும், இந்தியா உள்ளிட்ட நாடுகள் டிக்டாக் செயலிக்கு தடைவிதித்தன. அமெரிக்கா கடந்த 2022இல் சில விதிவிலக்குடன் டிக்டாக் செயலியை அரசு சாதனங்களில் பயன்படுத்த தடைவிதித்தது.

இந்நிலையில் நியூயோர்க் மாநில நிர்வாகம் அரசு சாதனங்களில் டிக்டாக் செயலியை முற்றிலும் பயன்படுத்த தடைவிதித்துள்ளது. பாதுகாப்பு காரணமாக இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக நியூயோர்க் மாநில நிர்வாகம் தெரிவித்துள்ளது.

அமெரிக்கா

## டிரம்புக்கு ஆஜராக உத்தரவு

அமெரிக்காவில் 2017 முதல் 2021ஆம் ஆண்டு வரை ஜனாதிபதியாக இருந்தவர் டிரம்ப். அடுத்த ஆண்டு நடைபெற உள்ள ஜனாதிபதி தேர்தலிலும் குடியரசு கட்சி சார்பில் இவர்தான் முன்னிலை வகிக்கிறார். டிரம்ப் மீது தனக்கு எதிராக பாலியல் புகார் அளித்த பெண்களுக்கு குற்றத்தை மறைப்பதற்காக பணம் வழங்குதல், வெள்ளை மாளிகையில் இருந்து இரகசிய ஆவணங்களை கடத்திச் சென்றமை உள்பட பல்வேறு குற்றச்சாட்டுகள் நிலுவையில் உள்ளன. அதில், ஜொர்ஜியா மாகாணத்தில் 2020ஆம் ஆண்டு நடந்த தேர்தல் மோசடி குறிப்பிடத்தக்க ஒன்றாகும். அந்தத் தேர்தலில் அவர் தற்போதைய ஜனாதிபதி ஜோ பைடனுடன் போட்டியிட்டு தோல்வியை தழுவினார்.

இது தொடர்பான வழக்கு விசாரணை அங்குள்ள ஜோர்ஜியா மாகாண நீதிமன்றத்தில் நடந்து வருகிறது. இந்நிலையில், குற்றப்பத்திரிகையில் உள்ள 19 பேரிடமும் ஒரே நேரத்தில் விசாரணை நடத்த நீதிமன்றம் முடிவு செய்தது. எனவே, டிரம்ப் உட்பட வழக்கில் தொடர்புடைய 19 பேரும் பிடியாணை பிறப்பித்து நீதிமன்றம் உத்தரவிட்டது. அதேசமயம் வருகிற 25ஆம் திகதிக்குள் தாமாக முன்வந்து ஆஜராக வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது.

சுப்பர் கிண்ணம்:

# செவிய்யாவை வீழ்த்திய சிற்றி




ஐரோப்பிய கால்பந்தாட்டச் சங்கங்களின் ஒன்றியத்தின் சுப்பர் கிண்ணப் போட்டியில் இங்கிலாந்து பிறீமியர் லீக் கழகமான மன்செஸ்டர் சிற்றி வென்றது.

கிரேக்கத்தில் நேற்று அதிகாலை நடைபெற்ற யூரோப்பா லீக் சம்பியன்களான செவிய்யாவுடனான இப்போட்டியில் சம்பியன்ஸ் லீக் சம்பியன்களான சிற்றி பெனால்டியில் வென்றது.

இப்போட்டியின் வழமையான நேரத்தில் இரண்டு அணிகளும் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றிருந்த நிலையில், பெனால்டியிலேயே 5-4 என்ற ரீதியில் சிற்றி வென்றது.



## உடற்கட்டமைப்பாளர் கௌரவிப்பு

■ எஸ்.கே. குமார்

நுவரெலியா லிட்டில் இங்கிலாந்து பிரைவேட் நிறுவனத்தின் அனுசரணையுடன் உடற்கட்டமைப்புத் துறையில் நுவரெலியா மாவட்டத்துக்கும் இலங்கைக்கும் புகழைக் பெற்றுக் கொடுத்த விளையாட்டு வீரர்களுக்கான பாராட்டு விழாவானது நேற்று முன் தினம் நுவரெலியாவில் நடைபெற்றது.

இந்த விழாவில் சங்கர் கணேஷ், ஜே.பி. உபுல், கயான் கனிஷ்க, கிறிஸ்டி கோம்ஸ் ஆகியோர் மாகாணம் மற்றும் தேசிய ரீதியிலும் எரந்த புத்திக, சுபாஷ் பத்மா ஆகியோர் சர்வதேச ரீதியிலும் பல வெற்றிகளை பெற்றுக் கொடுத்த வீரர்களுக்கும் பாராட்டுக் கிண்ணங்கள் வழங்கப்பட்டன.



## விளையாட்டுத்துறை மேம்படுத்தல் நிகழ்ச்சிக்கான ஒப்பந்தம் கைச்சாத்து

■ பு. கஜிந்தன்

விளையாட்டுத்துறை மேம்படுத்தல் நிகழ்ச்சி திட்டத்துக்கான ஒப்பந்தமானது, வவுனியா பல்கலைக்கழகத்தில் நேற்று முன்தினம் கைச்சாத்திடப்பட்டது.

இதன் மூலமாக விளையாட்டுதுறையினை அபிவிருத்தி செய்தல் மற்றும் சிறந்த விளையாட்டு வீர, வீராங்கனைகளை உருவாக்கும் நோக்கில் குறித்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.

குறித்த ஒப்பந்தத்தில் வவுனியா பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் ரி. மங்களேஸ்வரன் மற்றும் குட்வில் நிறுவனத்தின் ஸ்தாபகர் குசல் குணசேகர ஆகியோர் ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டிருந்தனர்.

ஜொலிபோய்ஸ் சம்பியன் கிண்ணத் தொடர்:

## சம்பியனான ஒலுவில் லெவிண் ஸ்டார்




■ வி. சுகிர்தகுமார்

> தர்மசங்கரி மைதானத்தில் நடைபெற்ற இறுதிப் போட்டியில் பள்ளிக்குடியிருப்பு றகிமியா அணியை வென்றே லெவிண் ஸ்டார் சம்பியனானது

அக்கரைப்பற்று ஜொலிபோய்ஸ் விளையாட்டுக் கழக 40 ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்பட்ட ஜொலிபோய்ஸ் சம்பியன் கிண்ணத் தொடரில் ஒலுவில் லெவிண் ஸ்டார் சம்பியனானது.

தர்மசங்கரி மைதானத்தில் அண்மையில் நடைபெற்ற 32 கழகங்களை உள்ளடக்கிய இத்தொடரின் இறுதிப் போட்டியில் பள்ளிக்குடியிருப்பு றகிமியா அணியை வென்றே லெவிண் ஸ்டார் சம்பியனானது.

எட்டு ஓவர்களுக்கு மட்டுப்படுத்தப்பட்ட இத்தொடரின் இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வென்ற லெவிண் ஸ்டார், றகிமியாவை முதலில் துடுப்பெடுத்தாடப் பணித்தது.

அந்தவகையில் முதலில் துடுப்பெடுத்தாடிய றகிமியா அணி 8 ஓவர்களில் 6 விக்கெட்டுகளை இழந்து 61 ஓட்டங்களைப் பெற்றது. பதிலுக்கு 62 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய லெவிண் ஸ்டார், 6.2 ஓவர்களில் 5 விக்கெட்டுகளை இழந்த நிலையில் வெற்றியிலக்கையடைந்தது.

இப்போட்டியின் நாயகனாக லெவிண் ஸ்டாரின் மலீக்கும், தொடரின் நாயகனாக அதேயணியின் சிபான் தெரிவானார்.

இரண்டாமிடத்தைப் பெற்ற றகிமியாவுக்கு 30,000 ரூபாய் பணப்பரிசும், சம்பியனான லெவிண் ஸ்டாருக்கு 50,000 ரூபாய் பணப்பரிசும் சம்பியன் கிண்ணமும் வழங்கப்பட்டது.



2000ஆம் ஆண்டு அணியினரால்

## கல்முனை அல் பஹ்ரியாவுக்கு உபகரணங்கள் அன்பளிப்பு

■ அஸ்ஹர் இப்றாஹீம்

கல்முனை அல் பஹ்றியா 2000ஆம் ஆண்டு அணியினர் சுமார் 90,000.00 ரூபாய் பெறுமதியான விளையாட்டு உபகரணங்களை கையளிக்கும் நிகழ்வானது பாடசாலையின் அதிபர் எம்.எஸ்.எம். பைசால் தலைமையில் அண்மையில் நடைபெற்றது.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் வெள்ளிக்கிழமை, 18 ஓகஸ்ட் 2023, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.